Registered at the G. P. O. as a Newspaper

விலை சதம் 10

# ஈழநாடு

EELA NADU
National TAMIL DAILY

தேசிய தினசரி

போன் 389

தபாற் பெட்டி எண் 49

மலர் 3 | யாழ்ப்பாணம், பிலவ புரட்டாசி 2 ஆம் நாள் | ரபி ஆகிர் 7 | (18-9-61) | திங்கட்கிழமை | இதழ் 185

வாசனை உலகில் ஓர் பரபரப்பு!

இன்பம் தரும் 33 303 3003 பத்திகளை

உபயோகியுங்கள்.

தயாரிப்பாளர்கள்:

S. V. முருகேசன் அன் சன்ஸ்

சென்னை பெங்களூர்–2 மதுரை

# இலங்கை வரும் சட்ட விரோத குடியேற்ற காரர்கள் தொகை குறைந்தது

## கேரளத்தில் ஹைகமிஷனர் கபூர் தகவல்

திருவனந்தபுரம், செப். 17

இந்தியாவிலிருந்து இலங்கைக்குச் சட்டவிரோதமாகக் குடியேறுபவரின் தொகை சென்ற சில மாதங்களாகக் குறைந்துள்ளதென்றும் இது தமக்கு பெரும் மகிழ்ச்சியளிப்பதாகவும் இலங்கையிலுள்ள இந்திய ஹைகமிஷனர் திரு. பி. கே. கபூர் இங்கு நிருபர்களிடத்தில் கூறினர்.

"அநேகமாக சட்டவிரோதக் குடியேற்றம் இப்பொழுது இல்லையென்றே கூறலாம். இதற்கு இந்திய அரசாங்கமும் இலங்கை அரசாங்கமும் எடுத்த முயற்சியே காரணம்" என்று திரு. கபூர் தெரிவித்தார்

'இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வரும் சட்ட விரோதக் குடியேற்றக் காரர்களின் தொகை சென்ற சில மாதங்களாகக் குறைந்து வந்துள்ளது. இது எனக்கு மகிழ்ச்சியளிக்கிறது'.

இவ்வாறு இங்கு பத்திரிகை நிருபர்களின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் இலங்கை இந்திய ஹைகமிஷனர் திரு. பி. கே. கபூர் கூறினர். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தற்பொழுது, இலங்கைக்கு இந்திய சட்ட விரோதக் குடியேற்றக்காரர்கள் வருவதேயில்லை யெனலாம். இந்தியா இலங்கை ஆகிய இரு அரசாங்கங்களின் ஒத்துழைப்பினலேயே இது சாத்தியமாகியுள்ளது. இந்தியாவிலிருந்து சட்ட விரோதக் குடியேற்றக் காரர்கள் இலங்கைக்கு செல்லாதவாறு இந்திய அரசாங்கம் தம்மாலான முயற்சி எடுத்துள்ளது. இது தான் அவர்கள் இதுகாறும் பின்பற்றி வரும் கொள்கையுமாகும்.

இலங்கையிலிருந்து உணவு, வர்த்தக, கப்பல் போக்குவரத்து மந்திரி திரு. டி.பி. இலங்கரத்னதலைமையில்ஒருவர்த்தக தூதுகோஷ்டியொன்று அடுத்த மாத நடுப்பகுதியில் இந்தியாவுக்கு வரவிருக்கிறது. இத்தூது கோஷ்டி இங்குள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும். கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் தூது கோஷ்டியொன்றும் இலங்கையிலிருந்து தூத்துக்குடிக்கு இவ்வாரம் வரவிருக்கிறது. இக் கோஷ்டி உள்ளூர் கருவாட்டு வியாபாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தும். இலங்கை, இந்தியாவிலிருந்து 4 கோடி ரூபாய் பெறுமதியான கருவாட்டை இறக்குமதி செய்கிறது.

இலங்கை—இந்தியர் பிரச்சினை' சம்பந்தமான பேச்சுவார்த்தைகள் பற்றிக் குறிப்பிடுகையில் திரு. கபூர் தெரிவித்ததாவது:-

இலங்கையிலுள்ள இந்திய வம்சாவளியினர் பற்றி இந்திய அரசாங்கத்துடன் வெகு விரைவில் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாக இலங்கை அரசாங்கம் தெரிவித்துள்ளது. எப்பொழுது, எவ்விதம் இப்பேச்சு வார்த்தை நடைபெறுமென நான் சொல்வதற்கில்லை. இலங்கையில் கேரள மக்கள் பலர் வசிக்கின்றனர். இவர்களை விடப் பெருந்தொகையான சென்னை வாசிகளும் அங்கு வசிக்கின்றனர்.'

—

## இன்று

அச்சுவேலி, திங்கள்

அமரர் திரு. கு. வன்னியசிங்கத்தின் ஞாபகார்த்தக் கூட்டமொன்று இன்று திங்கட்கிழமை மாலை 7 மணியளவில் ஆவரங்காலில் நடைபெற ஏற்பாடாகியுள்ளது. அட்வக்கேட் திரு. எஸ். கதிரவேற்பிள்ளை தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் உட்படப் பலர் சொற்பொழிவாற்றுகின்றனர்.

—

## சென்னையில் தி. மு. க. ஊர்வலம்

சென்னை, செப். 17

திராவிட முன்னேற்றக் கழகத்தின் 12 ம் ஆண்டுவிழாவை முன்னிட்டு, இன்று சென்னையில் ஊர்வலம் ஒன்று நடைபெறுகிறது.

## தப்பியோடியவர் கைது

முள்ளியவளை, ஞாயிறு

குமாரபுரம் கதிர்வேலாயுத சுவாமி கோவில் திருட்டு சம்பந்தமாக தண்ணீரூற்று கிராம அதிகாரி திரு. பொ. செல்வநாயகத்தினுல் கைதுசெய்யப்பட்டுத் தப்பி ஓடிய கா. அலி அக்பர், தண்ணீர் முறிப்பு என்னுமிடத்திலிருந்து தண்ணீரூற்றுக்கு வந்த வண்டியொன்றில் சாக்குக் கட்டுகளுக்கிடையே ஒளித்திருந்ததை திரு. வை. துரையப்பா என்பவர் கண்டுபிடித்து, கிராம அதிகாரியிடம் ஒப்படைத்தார். கா. அலி அக்பர், பொலிஸில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

—

## கைப்பந்தாட்டப் போட்டி

மாவிட்டபுரம், ஞாயிறு

காங்கேசன்துறைப் பட்டின சபையின் வருடாந்த சுகாதார தினத்தை முன்னிட்டு மேற்படி பட்டினசபையின் ஆதரவின் கீழ் ஸ்புட்னிக் விளையாட்டுக் கழக 'ஏ' பிரிவு கைப்பந்தாட்டக் கோஷ்டிக்கும், பொடியில் டேர்ஸ் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற கைப்பந்தாட்டப் போட்டியில் ஸ்புட்னிக் விளையாட்டுக்கழகம் முதல் இரு ஆட்டங்களிலும் வெற்றிபெற்றது. ஸ்புட்னிக் விளையாட்டுக்கழகம் முதல் இரு ஆட்டங்களிலும் 15—3, 15—5 புள்ளிகளைபெற்றது.

ரேயல் விளையாட்டுக் கழகத்திற்கும் பொடியில்டேர்ஸ் விளையாட்டுக்கழகத்திற்கும் நடைபெற்ற மற்றோர் போட்டியில் ரேயல் விளையாட்டுக் கழகம் 2 புள்ளிகளால் வெற்றியீட்டியது.

—

## கலைக்களஞ்சியம் 8-ம் வெளியீடு

சென்னை, செப். 17

தமிழ்க் கலைக்களஞ்சியத்தின் 8-வது தொகுதி இன்று சென்னையில் வெளியிடப்பட்டது. 9-வது தொகுதி அடுத்த ஆண்டு வெளியாகும் என இது சம்பந்தமான விழாவுக்குத் தலைமைவகித்த திரு. அவினுசிலிங்கம் செட்டியார் அறிவித்தார்.

## தனிப்பட்ட வியாபாரிகளுக்கு வழங்கிய சிமிந்தி கோட்டா

### சிமிந்தி கார்ப்பரேஷன் ரத்து செய்தது

மாவிட்டபுரம், ஞாயிறு

இலங்கையில் ரஷ்யா, போலந்து, தென் இந்தியா, காங்கேசன் ஆகிய இடங்களிலுள்ள சிமிந்தியை பொதுமக்களும் அரசாங்கமும் தங்கள் தேவைக்கு உபயோகிக்கிறார்கள். இவற்றில் மேற் கூடிய மூன்று வெளிநாட்டு சிமிந்திகளும் குறைந்த விலைக்கும்; காங்கேசன் சிமிந்தி கூடிய விலைக்கும் விற்கப்படுகிறது. இதற்குக் காரணம் தொழிற்சாலையில் ஒரு பை சிமிந்தி எட்டரை ரூபாவாக விற்கப்பட்ட போதிலும் தனிப்பட்ட வியாபாரிகள் தங்களுக்குள்ள சலுகையைப் பயன்படுத்தி 11 ரூபா வரை விற்கிறார்கள். மேலும் இலங்கையில் பாவிக்கப்படும் மற்றச் சிமிந்திகளிலும் பார்க்க காங்கேசன் சிமிந்தி தரத்தில் உயர்ந்தது. இதனுற் பாவனையாளர்கள் விலையைப் பாராது இச்சிமிந்தியை அதிகமாக வாங்குகிறார்கள். அரசாங்கம் காங்கேசன் சிமிந்தியை பொதுமக்கள் நியாயமான விலைக்குப் பெறச் செய்வதற்காக தனிப்பட்ட வியாபாரிகளுக்குச் சிமிந்தி விநியோகம் செய்வதைத் தடைசெய்துள்ளது. இலங்கை சிமிந்திக் கார்ப்பரேஷன் வடமாகாணத்திலுள்ள 13 தனிப்பட்டவியாபாரிகளுக்கும்15 கூட்டுறவுச் சமாசங்களுக்கும் சிமிந்தி வியாபாரம் செய்வதற்குக் கோட்டா வழங்கியிருந்தது. இதிற் கூறப்பட்ட சமாசங்களிற் சில சிமிந்திக் கார்ப்பரேஷனின் அனுமதியின்றி சில தனிப்பட்ட வியாபாரிகளுக்கு வழங்கிவந்தன. சிமிந்தித் தொழிற்சாலை உயர்தர அதிகாரிகள் நடத்திய திடீர்ப் பரிசோதனையின்போது இச்சம்பவம் கண்டுபிடிக்கப்பட்டது.

சிமிந்தி கார்ப்பரேஷன் 13 தனிப்பட்ட வியாபாரிகளுக்கும் வழங்கியிருந்த கோட்டாவை இரத்துச்செய்ததுமல்லாமல், கூட்டுறவு சமாசங்களும் தனிப்பட்ட வியாபாரிகளுக்குச் சிமிந்தி விற்கக்கூடாதென தடைசெய்துள்ளது. கூட்டுறவு சமாசங்கள் தங்களுக்குக் கீழுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு வியாபாரத்திற்காக சிமிந்தி விநியோகம் செய்யலாம். ஆனல் பொதுமக்களுக்கு விநியோகம் செய்வதற்கு பிரிவுக் காரியதரிசியின் சிபார்சுக் கடிதம் வேண்டும். மற்றவர்களுக்கு விநியோகிக்க முடியாது.

## நெல்விளைவை அதிகரிப்பது எப்படி?

கொழும்பு, ஞாயிறு

நெல்விளைவை அதிகரிப்பது சம்பந்தமான 10 வழிகள் அடங்கிய சிறுபிரசுரம்ஒன்றையும், பல துண்டுப்பிரசுரங்களையும் விவசாய டைரக்டர் சீக்கிரம் வெளியிடுவார். காணி மந்திரி திரு. ஸி. பி. டி' சில்வாவின் உத்தரவுப்படி டைரக்டர் இவ்வித ஏற்பாட்டைச் செய்யவிருக்கிறார்.

—

## முதல் குழந்தை!

### மந்திரி தமாஷ்

சென்னை, செப். 17

சென்னை நிதிமந்திரி ஸ்ரீ சி. சுப்ரமணியம் செயின்ட் மேரிஸ் மண்டபத்தில் நடைபெற்ற "மலரும் உள்ளம்" வெளியீட்டு விழாவில் பேசுகையில், உள்துறை மந்திரி ஸ்ரீ பக்தவத்சலத்தை ஒரு குழந்தைக்கு ஒப்பிட்டுப் பேசினர்.

"மலரும் உள்ளம்" இரண்டாம் பாகத்தின் முதல் பிரதியை ஸ்ரீ பக்தவத்சலத்திடம் அளித்து ஸ்ரீ சுப்பிரமணியம் கூறியதாவது:-

முதற்குழந்தை நமது உள்துறை அமைச்சர் ஸ்ரீ பக்தவத்சலத்திடம் கொடுத்தேன். எல்லோரும் ஏதோ ஒருமுறையில் குழந்தைப்பருவத்தில் இருப்பவர்கள் தான். அவருக்குக் கொடுத்த பிறகுதான் பின் மற்றக் குழந்தைகளுக்குக் கொடுத்தேன்" என்றார்.

இதைக் கேட்டுக் கூட்டத்தில் பலத்த சிரிப்பொலி எழுந்தது.

## பல்கலைக் கழக பொறி இயல் கட்டிடம் 1963-ம் ஆண்டு முடிவடையும்

கொழும்பு, ஞாயிறு

பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறி இயல் கட்டிடவேலைகள் 1963-ம் ஆண்டு முடிவடையுமென எதிர்பார்க்கப்படுகிறது. 180 லட்ச ரூபாய் செலவில் அமைக்கப்படும் இக் கட்டடத்தில் 400 பேருக்கு இடவசதி இருக்கும். அமெரிக்கா இக் கட்டிட அமைப்பிற்காக 76 லட்சம் ரூபாய் உதவ முன்வந்துள்ளது. ஏற்கெனவே இத்தொகையில் ஒருபகுதி வழங்கப்பட்டிருக்கிறது. பல்கலைக்கழகத்திற்கு தண்ணீர் வசதித் திட்டம் ஒன்றும் 1962-ல் பூர்த்தியாகும். 48 லட்சம் ரூபாய் செலவாகும் இத் திட்டத்தின் மூலம் 10 லட்சம் கலன் தண்ணீர் சேமித்துவைக்க வசதி கிடைக்கும்.




## உங்கள் நோய்

குணப்படுத்த உத்தரவாதம். நீரிழிவுக்கு 15 நாள் மருந்து ரூ. 15-50. தொய்வுக்கு 10 நாள் மருந்து ரூ. 12-50. பல வியாதிகளுக்கும் நற்சாட்சிப் பத்திரங்ளடங்கிய கற்றலோக் (Catalogue) இனும்.

**வைத்தியர் பரிபூரணநந்தர்,**
கைலாசபிள்ளையார் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

## தேவை

அரசாங்கத்தாற் பதிவு செய்யப்பட்ட எமது இலக்குமி இன்சூரன்ஸ் சங்கத்தில் கடமையாற்ற வெளி வேலை உத்தியோகத்தர்கள் பலர் தேவை. ஆகையால், விண்ணப்பிக்க விரும்புவோர் உடனடியாக கீழ்க்காணும் விலாசத்திற்கு விண்ணப்பிக்கலாம். தெரிவு செய்யப்பட்டோர்க்கு வேதனமாக மாதாந்தம் ரூபா 100-00 கொடுக்கப்படும். அன்றியும் அவர்கள் பிணைப்பணமாக ரூபா 500-00 எமது சங்கத்திற்குச் செலுத்தி பற்றுச் சீட்டைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மற்றும் விபரங்கட்கு என்னை நேரிலோ கடித மூலமோ அறிந்து கொள்ளலாம்.

சு. கந்தையா,
நிர்வாக அதிபர்
தலைமைக் காரியாலயம்,
சன்னசி பரந்தன்,
புளியங்குளம்.
11-9-61.

## அறிவித்தல்

நடராஜா அன் கோ என்ற எமது ஸ்தாபனம் 290, கே. கே. எஸ். றோட்டிலிருந்து, இம் மாதம் 11-ந் திகதி ஆஸ்பத்திரி வீதியில் 84-ம் இலக்கக் கடைக்கு மாற்றப்பட்டிருக்கிறது என்பதைத் தெரியப்படுத்துகிறோம். நடராஜா அன் கோ ஸ்தாபனத்தார்.

43, மணிக்கூடு வீதி, யாழ்ப்பாணம் எனும் இல்லத்தில் வசிக்கும் சோமசுந்தரம் மகாதேவா ஆகிய நான் இத்தால் தெரிவிப்பது யாதெனில், இது முதற்கொண்டு ஆறு வாரத்திற்குள் மேன்மைதங்கிய பிரதம நீதியரசர், மற்றும் இலங்கையைச் சேர்ந்த சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளுக்கு என்னை ஓர் புரக்டராகத் தங்களது மேன்மை தங்கிய கோர்ட்டுக்கு நியமிக்குமாறு விண்ணப்பஞ் செய்வேன்.

சோமசுந்தரம் மகாதேவா.
11-9-61.

திருக்கோணமலை வர்த்தக ஸ்தாபனம் ஒன்றில் கடமையாற்றுவதற்கு வர்த்தகக் கணக்கு, பலன்ஸ் சீற், ஆகியவற்றில் அனுபவமுள்ள ஒரு புக்கீப்பர் (Book-Keeper) தேவை. ஆடிட் ஸ்தாபன பயிற்சியும், தமிழ் அறிவும் தெரிந்திருப்பது விரும்பத்தக்கது. எல்லாம் உட்பட சம்பளம் ரூபா 350-00. கீழ்க் கண்ட விலாசத்திற்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும்: விளம்பரதாரர், 14, மிருனியா தெரு, கொழும்பு—12.

**வியாபாரம்பெருக விளம்பரம்செய்க**

## கழக விளையாட்டுப் போட்டியில் பொலிஸ் கான்ஸ்டபிள்சம்பியன்

அச்சுவேலி, ஞாயிறு

அச்சுவேலி நாவற்காடுஇந்து இளைஞர் முன்னேற்றச் சங்கத்தின் நாலாவது வருடாந்த விளையாட்டுப் போட்டி கழகத் தலைவர் திரு. து. துரைசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

சக்தி இல்லம் 151 புள்ளிகளையும், சிவன் இல்லம் 145 புள்ளிகளையும் பெற்று சக்தி இல்லம் இவ்வருடச் சாம்பியனில்லமாகத் தெரிவு செய்யப்பட்டது.

உயர் மேற்பிரிவில் மாத்தறை பொலிசைச் சேர்ந்த திரு. எஸ். பரந்தாமனும், மேற்பிரிவில் நா. நாகராசா, ம. கணேசு, இ. இரத்தினம் ஆகியோரும் மத்திய பிரிவில் மா. குழந்தைவேலு, நா. கணபதிப்பிள்ளை ஆகியோரும், கீழ்ப்பிரிவில் நா. [illegible]யும் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இல்ல அலங்காரப் போட்டியில் சக்தி இல்லமும், விநோத உடைப் போட்டியில் சிவன் இல்லமும் முதலாவதாக வெற்றியீட்டின.

ஆசிரியர் திரு. கே. சின்னப்பு பரிசில்கள் வழங்கினர்.

## அரசாங்க விடுமுறை நாட்கள்

கொழும்பு, ஞாயிறு

கைத்தொழில் உள்நாட்டுக் கலாச்சார மந்திரி திரு. மைத்திரிபால சேனநாயக்கா 1962-ம் ஆண்டு அரசாங்க விடுமுறை நாட்களில் மேலதிகமான ஆறு விடுமுறை நாட்களையும் சேர்த்துள்ளார். கீழ்வரும் விசேஷ தினங்கள் 1962-ம் ஆண்டின் அரசாங்க விடுமுறை நாட்களாகும்:

ஜனவரி 14-ம் திகதி தைப்பொங்கல், ஜனவரி 19-ம் திகதி பௌர்ணமி தினம், பெப்ரவரி 4-ம் திகதி சுதந்திர திருநாள், மார்ச் 8-ம் திகதி ரம்ஸான் முடிவு நாள், ஏப்ரல் 14-ம் திகதி தமிழ் — சிங்கள வருஷப்பிறப்பு, ஏப்ரல் 20-ம் திகதி பெரிய வெள்ளி, மே 1-ம் திகதி மேதினம், மே 18-ம் திகதி வைகாசி விசாகம், ஜூன் 17-ம் திகதி பௌர்ணமி, ஆகஸ்ட் 14-ம் திகதி நபிகள் நாயகம் பிறந்தநாள், செப்டம்பர் 26-ம் திகதி பண்டாரநாயக்கா ஞாபகார்த்த தினம், அக்டோபர் 17-ம் திகதி தீபாவளி, டிசம்பர் 25-ம் திகதி கிறிஸ்மஸ் பண்டிகை.

மேற் குறிப்பிடப்பட்ட தினங்களோடு ஜூன் 30, டிசம்பர் 31 ஆகிய தினங்கள் மேலதிக அரசாங்க வங்கி விடுமுறை நாட்களாகும்.

## விற்பனைக்கு

33 ஸ்ரீ தொடர்பிலக்கமுள்ள "போட்ஸ்வாகன்" வான் விற்பனைக்குண்டு. விபரங்கட்கு: றேடியோ என்ஜினியேர்ஸ், கொட்டடி றோட், யாழ்ப்பாணம்.

# 'உல்லாசப்பிரயாணிகளுக்கு வசதிகள் அளிக்கவேண்டும்'

—எம். பி.

கொழும்பு, ஞாயிறு

"உல்லாசப் பிரயாணத்தைப் பற்றிப் பெரிதாகக் கூறிக்கொண்டு உல்லாசப் பிரயாணத்துக்காக இலங்கைக்கு வரும் ஒவ்வொரு பிரயாணியையும் கள்ளத்தனமாகப் பொருள் கடத்துபவராகக் கணிப்பது சரியல்ல".

இவ்வாறு இரண்டுமாதகாலம் வெளிநாடுகளுக்குச் சென்று அனுபவம் பெற்றவரும் இலங்கை 'உல்லாசப் பிரயாணப் பகுதியின் ஆலோசனைச் சபையில் அங்கத்துவம் வகிப்பவருமாகிய இரத்தினபுரி எம். பி. திரு. டி. பி. ஆர். வீரசெகரா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

உல்லாசப் பிரயாணங்களுக்கு வசதி செய்து கொடுப்பதாக, குற்றவாளிகளாகக் கருதப்பட்டவர்களும் போலி ஏஜண்டுகளும் இங்கு வரும் பிரயாணிகளை ஏமாற்றி வருகின்றார்கள். போலி நகை வியாபாரிகளுக்கு இவர்கள் வியாபாரம் தேடிக்கொடுக்கின்றனர். இவ்வித பல மோசடிகளை இவர்கள் செய்து வருகின்றார்கள்.

திரு. வீரசேகரா இங்கு உல்லாசப் பிரயாணங்களை எவ்வாறு வளர்ச்சியுறச் செய்யலாம் என்பது பற்றித் தெரிவித்துள்ள கருத்து வருமாறு:

எங்களது முக்கிய கடமை இங்கு வரும் உல்லாசப் பிரயாணிகளைக் கூடிய காலத்துக்கு இங்கு தங்கியிருக்கச் செய்வதே. இலங்கைக்குவரும் உல்லாசப் பிரயாணிகள் கூடுதலாக 3 நாட்களுக்கே தங்குகின்றார்கள். இவர்களை 7 நாட்களுக்கோ அல்லது 10 நாட்களுக்கோ இங்கு தங்குமாறு செய்தால் எமது வருமானம் கூடும். இவ்விதம் பிரயாணிகளை இங்கு தங்கிப் போகுமாறி செய்வதற்கு நாம் அதிக சிரத்தை எடுக்க வேண்டும்.

உல்லாசப் பிரயாணிகள் இங்கு தமது விடுதலையை ஆனந்தமாகக் கழிக்க வருகின்றார்களே தவிர வியாபார நோக்கமாக வருவதில்லை. போக்கு வரத்து வசதிகளைக் கவனிப்பவர்கள் இதுபற்றி சிந்திப்பதில்லை. அவர்களிடமிருந்து எவ்வளவு பணம் பெற முடியுமோ அதை விரைவாகப் பெற்றுக் கொண்டு அவர்களையும் விரைவாக அழைத்துச் செல்கிறார்கள். இதனால் இங்கு வரும் உல்லாசப் பிரயாணிகள் வெறுப்புடன் திரும்புகிறார்கள்.

## ஊரெழு கொலைவழக்கு

### விசாரணை ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஊரெழு கொலைவழக்கு கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசுவால்டன் முன்னிலையில் மீண்டும் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்ட போது விசாரணையைப் பார்க்கத் திரண்டிருந்த சனக்கூட்டம் திரும்பவும் ஏமாற்றத்துடன் செல்ல வேண்டி ஏற்பட்டது.

இந்த வழக்கில் சுப்பையா மாடசாமி, முத்து முத்துசாமி, செல்வி சரஸ்வதி செல்லையா ஆகியோர் மீது மார்க்கண்டு என்பவனைக் கொலைசெய்ததாகவும், கொலைசெய்யச் சதி செய்ததாகவும், சாட்சியங்களை மறைத்ததாகவும் குற்றஞ்சாட்டி சுன்னாகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. கே. செபமாலையினால் இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

நேற்று இவ்வழக்கு விசாரணைக்கெடுத்துக்கொள்ளப்பட்ட போது, அரசாங்கப் பரிசோதனையாளர் திரு. டி. நாகராசா கோர்ட்டில் பிரசன்னமாயிருக்காததால் மேல்விசாரணையை இம்மாதம் 30-ம் திகதிக்கு மாஜிஸ்டிரேட் ஒத்திவைத்தார்.

அரசாங்க தரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. எஸ். சிவராசாவும், முதலாம், மூன்றும் எதிரிகளின் சார்பில் திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. சி. திரு. சி. எம். தருமலிங்கத்தின் உதவியுடன் திருவாளர்கள் வி. செல்வத்துரை, எஸ். செல்வரத்தினம்ஆகியோரின் அனுசரணையுடனும், இரண்டாம் எதிரியின் சார்பில் திரு. டி. கணேசலிங்கம் திரு. ஆர். விசுவநாதனின் அனுசரணையுடனும் ஆஜராயிருந்தனர்.

## ஐ. நா. படையில் கடாங்கா துருப்புக்கள்

நியுயோர்க், செப். 17

கடாங்காவில் ஜாடோட்வில்லியில் உள்ள கடாங்கா துருப்புக்கள் ஐ. நா. படையைச் சேர்ந்த ஜரிஷ் துருப்புக்களுடன் இணைந்து கொண்டதாக நியுயோர்க்கிற்குத் தகவல் கிடைத்துள்ளது.

ஒரு வாரமாக முற்றுகையிடப்பட்டிருந்த ஜரிஷ் துருப்புக்களுக்கு கடாங்கா துருப்புக்கள் உணவும் கொடுத்து உவினதவாம்.

# யாழ்ப்பாணத்திலிருந்து 35 நோயாளர்சத்திரசிகிச்சைக்காக கொழும்பு வந்தனர்

கொழும்பு, ஞாயிறு

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியிலிருந்து 35 மார்பு நோயாளர்கள் சத்திரசிகிச்சை பெறுவதற்காகக் கொழும்பு வந்து சேர்ந்துள்ளார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பு வந்துள்ள மார்பு சிகிச்சை வைத்தியர்குழுவொன்று இந்நோயாளர்களுக்கு உடனடியான சத்திர சிகிச்சை தேவைப்படுவதால் அவர்களைக் கொழுபுக்குக் கொண்டுவரவேண்டிநேரிட்டது எனக் கொழும்பு அதிகாரிகளுக்குக் கூறியுள்ளார்கள். கொழும்பிலிருந்து சத்திரசிகிச்சையாளர்கள் குழுவொன்று அனுப்பப்படும் சமயங்களில்தான் யாழ்ப்பாணத்தில் மார்புச் சத்திரசிகிச்சை நடைபெறுவதுண்டு.

மார்பு வியாதிகளுக்குச் சத்திரசிகிச்சை செய்யும் டாக்டர்கள் மூவர் மட்டும்தான் இலங்கையில் உண்டு. இவர்களில் இருவர் கொழும்பு ஆஸ்பத்திரியிலும் ஒருவர் இரத்தினபுரி ஆஸ்பத்திரியிலும் கடமையாற்றி வருகிறார்கள்.

மார்பு நோய்ச்சிகிச்சையாளர் மூவரும் வெவ்வேறு ஆஸ்பத்திரிகளிற் கடமையாற்றவேண்டுமென கொழும்பிலுள்ள சிரேஷ்ட சத்திரசிகிச்சையாளர் பலர் ஆலோசனை கூறியுள்ளார்கள். கொழும்பு ஆஸ்பத்திரியில் கடமையாற்றும் இருவருக்கும் போதிய வேலையில்லை என இவர்கள் கூறியுள்ளார்கள்.

10,000,000 மக்களும் விரும்பி வாங்குவன!
இலங்கை முழுவதும் புகழ் பரப்புவன!
எவை?

டொ
ல
ர்

ALUMINIUM INDUSTRIES (CEYLON) LTD.
ONE DOLLAR
DOLLAR BRAND

பவுன் அடையாளம் உள்ள
அலுமினியப் பாத்திரங்களே!
ஏன்?

டொலர் அலுமினியம் மாற்று உயர்ந்தது சுத்தம் உள்ளது!
டொலர் அலுமினியம் அழகு அமைப்பு கண்கவர்ச்சி உள்ளது!!
டொலர் அலுமினியம் உறுதி உழைப்பு உத்தரவாதம் உள்ளது!!!

எல்லாவற்றிற்கும் மேல்
உங்கள் தாய்ப் பொன்னுட்டில் மாவிட்டபுரத்தில்
நவீன முறையில் செய்யப்படுவது!

டொலர் பவுணை பார்த்து வாங்குங்கள்
எங்கும் கிடைக்கும்
டொலர் மாத்திரமே
உத்தரவாதமானது!

தயாரிக்குமிடம்:
அலுமினியம் இன்டஸ்ட்ரீஸ் லிமி.,
மாவிட்டபுரம். யாழ்ப்பாணம்.
J.D. 3

# ஐ.நா. படைகள் வாபஸானுல்தான் சண்டை நிறுத்த பேச்சுவார்த்தை

## ஷோம்பேயின் புதிய நிபந்தனை

### கடாங்காவுக்கு மேலும் ஐ.நா. துருப்புக்கள் விரைகின்றன

லியப்போல்ட்வில்லி, செப். 17

கடாங்காவில் உள்ள ஐ. நா. படைக்கு உதவி புரிவதற்காக காங்கோ படைகள் அனுப்பப்படவேண்டுமென்று காங்கோ மத்திய அரசாங்க பார்லிமெண்ட் நேற்று ஒரு தீர்மானத்தின்மூலம் மத்திய அரசாங்கத்தை வற்புறுத்தியது.

கடாங்கா நிர்வாகத் தலைவர் ஷோம்பேயையும் இதர கட்சித் தலைவர்களையும் லியப்போல்ட்வில்லிக்கு அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தவேண்டுமென்றும் பார்லிமெண்ட் தீர்மானித்தது.

கடாங்காவிலிருந்து ஐ. நா. துருப்புக்களை வாபஸ் பெற்றால் சண்டை நிறுத்தம் பற்றி பேச்சு வார்த்தை நடத்தத் தாம் தயாராக இருப்பதாக திரு. ஷோம்பே அறிவித்துள்ளார். ஷோம்பேயின் இந்த பிரகடனத்தை தென் ரொடீஷியப் பிரதமர் சேர் ரோஸ்வொலன்ஸ்கி நேற்று சாலிஸ்பரியில் பத்திரிகை நிருபர்கள் மகாநாடொன்றில் தெரிவித்தார்.

கடாங்காவின் தலைநகரரன எலிஸபெத்வில்லியில் தமது சொந்தத் துருப்புகளின் பாதுகாப்புடன் சென்ற வெள்ளிக்கிழமை தங்கியிருந்த திரு. ஷோம்பே, ஐ. நா. பிரதிநிதியுடன் சண்டை நிறுத்தம் பற்றி பேச்சு வார்த்தை நடத்துவதற்கு விருப்பம் தெரிவித்திருந்தார்.

இதற்கிணங்க ஐ. நா. பிரதிநிதி அவரைச் சந்திக்க ஒப்புக்கொண்டார். ஆனல் திரு ஷோம்பே எலிஸபெத்வில்லியை விட்டு இரகசியமாக வெளியேறி அதற்குச் சமீபமாகவுள்ள ஒரு நகருக்குச் சென்றுவிட்டார். அங்கிருந்து தான் "ஐ. நா. துருப்புக்களை வாபஸ் பெற்றால் பேச்சு வார்த்தை நடத்தத் தயார்" என்று இப்பொழுது நிபந்தனை விதித்துள்ளார்.

#### போராட்டம் நீடிக்கும்

கடாங்காவில் போராட்டம் நீடிக்கும் என்று ஐ. நா. வின் கடாங்கா அணியின் தளபதி பிரிகேடியர் ராஜா தெரிவித்துள்ளார். கடாங்காவுக்கு லியப்போல்ட்வில்லியிலிருந்து மேலும் ஐ. நா. துருப்புகள் வந்துகொண்டிருப்பதாக பிரிகேடியர் ராஜா தெரிவித்தார்.

#### செய்திக்கு மறுப்பு

ஜாடோட்வில்லியில் 150 ஐ.நா. துருப்புக்களை கடாங்கா துருப்புக்கள் சுற்றி வளைத்துக் கொண்டதாகவும் ஐந்து ஐரிஷ் துருப்புக்கள் கொல்லப்பட்டதாகவும் வெளி வந்த செய்தியை காங்கோவிலுள்ள ஐ. நா பிரதிநிதி டாக்டர் ஓபிரியன் நேற்று மறுத்தார.

ஐ. நா. தரப்பில் ஆட்சேதம் மிகச் சொற்பமே என்று டாக்டர் ஓபிரியன் கூறினர்.

கடாங்கா சிப்பாய்களுடன் நடந்தசண்டையில்காயமடைந்த 17 ஐ. நா. படை வீரர்கள் இப்பொழுது லியப்போல்ட்வில்லி ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகின்றனர். இவர்களில் 12 பேர் இந்திய வீரர்; மூவர் சுவீடன் வீரர்; மற்றிருவரும் ஐரிஷ் வீரர்கள்.

#### மலாயா பிரதமர் ஆதரவு

கடாங்காவில் ஐ. நா. எடுத்துக்கொண்ட நடவடிக்கைக்கு இந்தியா,அமெரிக்கா, மலாயா ஆகிய நாடுகள் ஆதரவு தெரிவித்துள்ளன.

அவசியமேற்பட்டால் காங்கோவிலுள்ள ஐ. நா. படைக்கு மேலும் துருப்புக்களை அனுப்ப மலாயா தயாராக இருப்பதாக மலாயா பிரதர் துங்கு அப்துல் ரஹ்மான் கூறினர்.

---

## லாவோஸ் நிலைமையில் நம்பிக்கை

### திரு. சென் கருத்து

புதுடில்லி, செப். 17

"லாவோஸ் நிலைமையில் அதிகமுன்னேற்றம் காணப்படவில்லையாயினும் நிலைமை நம்பிக்கைக்கு அறிகுறியாகத்தென்படுகிறது" என்று லாவோஸுக்கான சர்வதேசக் கட்டுப்பாட்டுக் கமிஷனின் தலைவர் திரு. சென் கூறினர்.

இந்திய அரசாங்கத்துடன் ஆலோசனை செய்வதற்காக புதுடில்லிக்கு வந்த திரு. சென் நேற்று பிரதமர் நேருவைச் சந்தித்துப் பேசினர். அவர் நாளை வியன்டைனுக்குப் பிரயாணமாகிறர். சர்வதேசக்கட்டுப்பாட்டுக்கமிஷனில் இந்தியா, போலந்து, கனடா ஆகிய மூன்று நாடுகளும் அங்கம் வகிக்கின்றன.

கட்டுப் பாட்டுக்கமிஷனல் அதிக பயன் ஏற்பட்டுள்ளதென்று திரு. சென் தெரிவித்தார்.

லாவோஸில் இருதரப்பினரும் படைபலத்தைப் பெருக்கிக் கொண்டிருக்கின்றனரென்றும் வெளிஉதவியும் கிடைத்து வருகிறதென்றும் திரு. சென் கூறினர்.

---

## ஒரிஸ்ஸா வெள்ளம் 10 பேர் மாண்டனர்

கட்டாக், செப். 17

ஒரிஸ்ஸாவில் ஏற்படுள்ள வெள்ளம் காரணமாக 10 பேர் மாண்டதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

வெள்ளத்தினல் பாதிக்கப்பட்டு தொடர்பு துண்டிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொட்டலங்கள் விமானத்திலிருந்து வீசப்பட்டு வருகின்றன. ஒரு இடத்தில் உணவுப் பொட்டலம் விமானத்திலிருந்து வீசப்பட்டபொழுது அது விழுந்ததில் ஐந்து பேர் மாண்டதாக அறிவிக்கப்படுகிறது.

---

## ஜப்பானில் கடும் புயலும் பெரு வெள்ளமும்

### 123 பேர் பலி; 80,000 வீடுகள் நாசம்; 2000 பேர் காயம்

டோக்கியோ, செப். 17

ஜப்பானில் கோரப் புயல் வீசியதில் 123 பேர் மாண்டனர். ஆயிரக்கணக்கான மக்கள் வீடு வாசல்களை இழந்தனர்; பலர் காயமடைந்தனர்.

மத்திய, தெற்கு ஜப்பானில் வீசிய கடும் புயலில் இதுவரை 123 பேர் மாண்டதாக அறியப்படுகிறது. சுமார் இரண்டாயிரம் பேர் காயமடைந்தனர். ஐம்பது பேரைக்காணவில்லை. எண்பதினயிரம் வீடுகள் நாசமாயின.

ஜப்பானின் இரண்டாவது பிரதான நகரமான ஒஸாக்காவில் பெரு வெள்ளம் ஏற்பட்டுள்ளது. சுமார் ஒரு லட்சம் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி விட்டனர். பல வீதிகள் ஆறுகள் போல் காட்சியளிக்கின்றன.

---

## நாரந்தனை சைவமகாசபை நிர்வாகிகள்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

நாரந்தனை சைவமகாசபையின் ஆருவது வருடாந்தப் பொதுக்கூட்டம் திரு. த. தில்லைநாதர் தலைமையில் நாரந்தனை கணேச வித்தியாசாலையில் நடைபெற்றது. பின்வருபவர்கள் புதிய நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர் திரு. த. தில்லைநாதர், உபதலைவர் திரு. வை. தம்பு, காரியதரிசி திரு. வை. சோமசுந்தரம், உபகாரியதரிசி, திரு. க. ஈசுவரநாதன், தனதிகதி திரு. சி. தியாகராசா. பதினைந்துபேர்கொண்ட நிர்வாகசபை ஒன்றும் அமைக்கப்பட்டது.

சமயப்பிரசங்கங்கள், குருபூசைகள் முதலியன நடாத்தி சமயப்பணிபுரிவதோடு நாரந்தனை வடக்கு, தான்தோன்றி ஈசுவரி ஆலய நிர்வாகத்தைச் செவ்வனே நடாத்துதல்வேண்டும் என இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

---

## காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு

ஆக்ரா, செப். 15

ஆக்ராவில் நடைபெற்ற காமன்வெல்த் நிதிமந்திரிகள் மகாநாடு முடிவடைந்தது. பிரிட்டன் ஐரோப்பியப் பொதுச்சந்தையில்சேருவதற்கு முன், காமன்வெல்த் பிரதமர்கள் மகாநாடு ஒன்று நடைபெறுமெனத் தெரிகிறது.

---

## 'ஒரு வருடத்துக்கு முன்செய்திருக்கவேண்டியது'

### கடாங்காவில் ஐ. நா. நிலைமைபற்றி நேரு

புதுடில்லி, செப் 17

"கடாங்காவில் ஐ. நா. இப்பொழுது எடுத்துள்ள நடவடிக்கை ஒரு வருடத்துக்கு முன்னரே செய்திருக்க வேண்டிய விஷயம்" என்று பாரதப் பிரதமர் நேரு இன்று நிருபர்கள் மகாநாட்டில் கூறினர்.

ஐ. நா. நடவடிக்கையைஆதரிக்க வேண்டியது அடிப்படை விஷயம் என்று ஸ்ரீ நேரு சொன்னர்.

லுமும்பாவின் கொலைக்குக் காரணமாகவிருந்த ஷோம்பேக்கு பெரிய அரசுகளின் ஆதரவு இருப்பது விந்தையாக இருக்கிறதென்று பாரதப் பிரதமர் தெரிவித்தார்.

ஐ. நா. நடவடிக்கையை அமெரிக்கா ஆதரித்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. ஆனல் பிரிட்டன் குறை கூறுவது வியப்பைத் தருகிறது என்று ஸ்ரீ நேரு தெரிவித்தார்.

காலனி ஆதிக்கம் ஒழிந்தாலும் காலனி அதிகாரவர்க்கம் எப்படியும் குட்டையைக் குழப்பிக் கொண்டிருப்பார்களென்பதற்கு கடாங்கா ஒரு உதாரணம் என்று கூறிய பிரதமர் சேர் ரோய் வொலன்ஸ்கி ஐ. நா. நடவடிக்கையை எதிர்ப்பது தமக்கு ஆச்சரியமளிக்கவில்லையென்றர்:

---

## அமெரிக்க, ரஷ்ய குண்டுப் பரீட்சை

வாஷிங்டன், செப். 17

அமெரிக்கா மற்றெரு அணுகுண்டை நேற்று பரீட்சித்தது, அமெரிக்கா அணுஆயுதப் பரீட்சையை மீண்டும் ஆரம்பித்தபின் பரிசோதிக்கப்பட்ட இரண்டாவது.குண்டான இது நேற்று நெவாடாவில் பூமிக்கு அடியில் பரீட்சிக்கப்பட்டது. கதிரியக்கத்தூள் வெளிவரவில்லை என்று அமெரிக்க அணுசக்திக் கமிஷன் தெரிவித்தது.

சோவியத் ரஷ்யாவும் நேற்று மீண்டும் மற்றெரு அணுகுண்டை வானவெளியில் பரீட்சித்தது. இம்மாதம் முதல் திகதி ரஷ்யா குண்டுப் பரீட்சையை ஆரம்பித்ததிலிருந்து நேற்றுவரை 11 குண்டுகளைப் பரீட்சித்துள்ளது. இத்தகவலை அமெரிக்க அணுசக்திக் கமிஷன்தெரிவித்தது:

---

## துருக்கியின் இரு மாஜி மந்திரிகள் தூக்கிலிடப்பட்டனர்

### பிரதமரும் தூக்கிலிடப்படுவார்

### ஜனதிபதிக்கு ஆயுட்காலச் சிறை

இஸ்தான்புல், செப். 17

துருக்கியின் முன்னள் நிதி மந்திரியும் முன்னள் வெளிவிவகார மந்திரியும் நேற்று அதிகாலை தூக்கிலிடப்பட்டனர்.

துருக்கியின் அரசியல் திட்டத்துக்கு முரணக நடந்து கொண்டதாக வெளிவிவகார மந்திரி பட்டின் ஸோர்லு, நிதிமந்தி ஸான் பொலாட்கன் ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டு இஸ்தான்புலுக்கு அருகிலுள்ள யான்ஸி தீவில் இராணுவ நீதிமன்றத்தில் விசாரணை நடைபெற்றது. விசாரணை முடிவில் நேற்று முன் தினம் இவர்களுக்குத் தூக்குத்தண்டனை விதிக்கப்பட்டது.

நேற்றுக் காலை இவர்களிருவரும் தூக்கிலிடப்பட்டனர்.

முன்னள் பிரதமர் திரு. அட்னன் மெண்டாஸ்ஸுக்கும் மரணதண்டனை விதிக்கப்பட்டது. சென்ற வியாழக்கிழமை இரவுதிரு. மெண்டாஸ் அளவுக்கதிகமான நித்திரை மாத்திரைகளை உட்கொண்டதால் மூர்ச்சையடைந்திருந்தார். அவருக்கு யாஸ்ஸி தீவு ஆஸ்பத்திரியில் சிகிச்சையளிக்கப்பட்டது. நேற்று இவர் மூர்ச்சை தெளிந்தார். ஆனல் இவர் வலுப்பெறும் வரை ஆஸ்பத்திரியில் தங்கியிருப்பார். வலுப்பெற்றதும் தூக்கிலிடப்படுவார்.

துருக்கியின் ஜனதிபதி திரு. செலால்பயாருக்கும் மற்றும் 12 அரசாங்கத் தலைவர்களுக்கும் விதிக்கப்பட்ட மரண தண்டனை இப்பொழுது ஆயுள் காலச் சிறைத் தண்டனையாகக் குறைக்கப்பட்டுள்ளது.

---

## கார்ப்பரேஷன்களும் சிவில் சேவையாளரும்

### பிரதமரின் தீர்மானம்

கொழும்பு, ஞாயிறு

சிவில் சேவையாளர்கள் அரசாங்க கார்ப்பரேஷன் எவற்றிற்குத் தலைவர்களாகவோ டைரக்டர்களாகவோ அன்றிப் பொது நிர்வாகிகளாகவோ நியமிக்கப்படல் கூடாதெனப் பிரதம மந்திரி தீர்மானித்துள்ளதாக திறைசேரி வெளியிட்ட சுற்றறிக்கையொன்று கூறுகிறது. இச் சுற்றறிக்கையை திறைசேரியின் காரியதரிசி திரு எச். எல். அமரசிங்கா விடுத்துள்ளார்.

சிவில் சேவையாளரைத் தான் நியமனம் செய்ய வேண்டிய நிலைமை எவ்விடத்திலாவது ஏற்பட்டால், நிதிமந்திரியின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்ட பின்னரே அவ்வாறன பிரத்தியேக நியமனத்தைச் செய்துகொள்ளலாம்.

---

## விஸ்வேஸ்வரையாவுக்கு 101 வயது

பங்களூர், செப். 15

பிரசித்தி பெற்ற எஞ்ஜினியரும், ராஜதந்திரியுமான டாக்டர் விஸ்வேஸ்வரையாவுக்கு இன்று 101 வது பிறந்த தினம். பிறந்ததினத்தை முன்னிட்டு மைசூர் அமைச்சர்களும், இதர பல பிரபலஸ்தர்களும் அவரது இல்லத்துக்குச் சென்று டாக்டர் விஸ்வேஸ்வரையாவுக்குப் பாரட்டுத் தெரிவித்தனர். மைசூர் சட்டசபையில் சபாநாயகர் இதுபற்றிக் குறிப்பிட்டு, டாக்டர் விஸ்வேஸ்வரையா மைசூருக்கும். இந்தியாவுக்கும் செய்துள்ள சேவைகளைப் பாராட்டினர். முதன் மந்திரி ஸ்ரீ ஜட்டியும் அவருக்குப் பாராட்டு தெரிவித்தார்.

---

## மதுரையில் பாரதிவிழா

மதுரை, செப்.15

மகாகவி பாரதியார் விழா இன்று மதுரையில் கொண்டாடப்பட்டது. திரு. என். எம். ஆர். சுப்பராமன் விழாவைத் துவக்கிவைத்தார்.

### மணிவாக்கு

எப்போதும் உழைத்துக் கொண்டிரு. உழைப்பிலே சுகமிருக்கிறது. வறுமை, நோவு முதலிய குட்டிப் பேய் உழைப்பைக் கண்டவுடன் ஓடிவிடும்.

—பாரதியார்

ஈழநாடு
EELA NADU

யாழ்ப்பாணம் பிலவ ஆண்டு புரட்டாசி மீ 2 உ (18-9-61)

EELA NADU: National Tamil Daily Post Box 49, Jaffna
Telegarms EELA NADU Jaffna
Phone: 389.

## பார்லிமெண்ட் விவாதங்கள்

ஒரு வாரத்துக்கு முன்புதான் பார்லிமெண்டிலே வரவு செலவு திட்ட விவாதம் முடிந்தது. அதற்குள்ளாக ஏழு கோடி அதிகப்படி செலவுக்கான உபமான்யப் பிரேரணைகளைப் பற்றி மீண்டும் விவாதங்கள் நடக்கின்றன. சொன்னதையே திருப்பித் திருப்பி சொல்லிக் கொண்டிருக்கிருர்கள்.

கல்வி, தொழில் முதலிய பல முக்கிய இலாகாக்களைப் பற்றி வரவு செலவுத்திட்டத்தின் போதும் பரிசீலனை நடைபெறவில்லை. ஐந்து மந்திரிகளின் மான்யங்களைப் பற்றித்தான் விவாதம் நடந்தது. மற்ற 6மந்திரிகளின் நிர்வாகத்தைக் குறித்து பரிசீலனை செய்ய சபைக்கு நேரமில்லை என்று சொல்லி, அப்படியே நிறைவேற்றி விட்டார்கள். குறித்த மந்திரிகளுக்கு இதனல் சமாதானம் சொல்ல வேண்டிய தேவையில்லாமல் வாசியாகப் போயிருக்கலாம். ஆனல் நிர்வாகத்திலுள்ள பல குறைகளையும் அம்பலப்படுத்தி, அவற்றை மந்திரியின் கவனத்துக்குக் கொண்டுவந்து, நிவாரணம் பெறக் கூடிய சந்தர்ப்பம் இல்லாமற் போனது பெரிய குறையாகும்.

வருடா வருடம் வரவு செலவுத் திட்ட விவாதத்தில் பல இலாகாக்களின் நிர்வாகம் பற்றி இவ்விதமே பரிசீலனை செய்ய முடியாமற் போவது வழக்கம் தான். என்ருலும் இக் குறையைத் தீர்க்க முன் கூட்டியே சபாநாயகரும் பல கட்சித் தலைவர்களும் கூடிப் பேசி, இது பற்றி ஓர் ஒழுங்கு செய்து கொள்ள வேண்டியது மிகவும் அவசியமாகும். முன்னர் 100 மெம்பர்கள் தான் பார்லிமெண்டில் இருந்தனர். இப்போது மெம்பர்களின் எண்ணிக்கை 150க்கு மேல் உயர்ந்து விட்டது. ஆகவே விவாதத்துக்கான காலத்தையும் அதிகரிக்க வேண்டியது அவசியமாகும்.

பிரிட்டனிலே இவ்விஷயமாக அனுசரிக்கும் முறையையே இலங்கையிலும் நாம் வெகுவாகப் பின் பற்றி வருகிறோம். பிரிட்டிஷ் பார்லிமெண்டிலும் முதலில் ஏற்பாடு செய்து கொண்ட சில இலாகாக்களைப் பற்றியே வரவு செலவுத்திட்ட விவாதத்தின் போது பரிசீலனை நடைபெறுகிறதென்றும் மறு வருடங்களில் மற்ற இலாகாக்களைப் பற்றி பரிசீலனை நடைபெறுவதாயும், இதில் ஒரு திட்டம் ஏற்படுத்திக் கொண்டு, எல்லா இலாகாக்களைப் பற்றியும் பூரணமாகப் பரிசீலனை செய்து வருவதாயும் சொல்லப்படுகின்றது.

ஆனல் இலங்கையிலோ, ஒவ்வொரு வருடமும், முதல் சில மந்திரிகளின் இலாகாக்கள் மட்டுமே பரிசீலனைக்கு உள்ளாகின்றன. மற்றவை கடைசி வரை பரிசீலனை செய்யப்படுவதில்லை. இதனல் இந்த இலாகாக்களின் நிர்வாகத்திலுள்ள குறைகள் வெளியிடப்படாமலே போவதால், ஊழல்கள் அதிகரிக்கவும் நிர்வாகம் மோசமடையவும் இடமேற்படுகின்றது. பிரிட்டனில் செய்தது போல் முன்கூட்டியேசில குறிப்பிட்ட மந்திரிகளின் நிர்வாகத்தைபற்றிபரிசீலனைசெய்வதென்றும் மற்ற மந்திரிகளின் நிர்வாகத்தைப் பற்றி மறு வருடம் முதலில் பரிசீலனை செய்வதென்றும் ஒழுங்கு செய்து கொள்ளலாம். அல்லது பல மெம்பர்களும், சொன்னதையே திருப்பித் திருப்பிச் சொல்லாமல், அனவசியமான பேச்சுகளை கூடுமானவரை மட்டுப்படுத்திக் கொண்டு, ஒவ்வொரு மந்திரியின் நிர்வாக பரிசீலனைக்கும் காலத்தை திட்டப்படுத்தி, குறித்த காலத்துக்குள்ளாக எல்லா மந்திரிகளின் நிர்வாகத்தைப் பற்றியும் பரிசீலனை செய்ய ஒழுங்கு செய்யலாம்.

பல கட்சிகளும், கட்சிப் பற்றில்லாத பலரும் இருப்பதால், விவாத நேரத்தை திட்டப்படுத்துவது சுலபமன்று. என்ருலும் பொது மக்களின் நன்மையைக் கருதி இப்பெரிய குறையை கூடுமானவரை தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டியது அரசாங்கமுள்ளிட்டு எல்லா கட்சியினரது மேலான பொறுப்பாகும்.

# அரசியல் முட்டுக்கட்டை தீர புதிய சந்தர்ப்பம்

## அவசர காலநிலை நீடிப்பு: செப்டம்பர் 26ல் தலைவர்கள் விடுதலை?: அரசியல்கமிட்டி: செனட்தேர்தல்: இந்தியா—இலங்கை பேச்சுகளுக்கு முன்னேற்பாடு: நல்ல சூழ்நிலை: அரசாங்க மனமாற்றம்

—நமது அரசியல் நிருபர்—

ஆருவது மாதமாக அவசர காலம் இலங்கையில் நீடிக்கப் பட்டிருப்பதாக கவர்னர்-ஜெனரல் அறிவித்துள்ளார்

இதைப்பற்றி பார்லிமெண்டில் எதிர்க்கட்சியினர் பலமாக ஆட்சேபித்தனர். அவிசாவளை மெம்பர் பிலிப் குணவர்த்தன, இப்போது அவசர காலத்தை நீடிக்கக் காரணமில்லை என்றும், நாடெங்கும் அமைதி நிலவுவதாகவும், தமிழரசுக் கட்சி எம். பி. க்களை தடுப்புக் காவலிலிருந்து விடுதலை செய்து, அவசரகாலத்தையும் முடிவுக்குக் கொண்டு வரவேண்டுமென்றும் வற்புறுத்தினர். தமிழரசுக் கட்சி எம். பி.க்களை பார்லிமெண்டில் பிரதிநிதித்துவம் வகிக்க மக்கள் அனுப்பியுள்ள போது ஒரு காரணமுமின்றி அவர்களை ஏன் வெளியே தடுப்புக் காவலில் வைத்திருக்க வேண்டுமென்றும் அவர் கேட்டார்.

இதற்கு சபை முதல்வரான ஸி. பி. டி' ஸில்வா அளித்த பதிலில் வடக்கு, கிழக்கு மாகாணங்களிலே நிலைமை அமைதியாக இருப்பினும், சகஜ நிலை ஏற்பட வெகு தூரமுள்ளதென்ருர். சட்டத்தையும் ஒழுங்கையும் மீற சிறப்பாக வட மாகாணத்தில் சிலர் முயன்று வருவதாயும், இப்பகுதியில் மற்ருேர் இயக்கத்தை ஆரம்பிக்க, ரகசிய கூட்டங்கள் நடப்பதாயும், துண்டுப் பிரசுரங்கள் அச்சடித்து விநியோகிக்கப்படுவதாயும் கூறினர். இதைப் பார்க்கையில் அவசர கால நிலைமை சமீபத்தில் முடிவுக்கு வருமா என்பது சந்தேகம்.

அவசர நிலைமை நீடிப்பது காரணமாக புதிய வரிகளை எதிர்த்து பொது மக்கள் கிளர்ச்சி செய்ய முடியாதிருப்பதாக காலி மெம்பர் தகநாயக்கா தெரிவித்தார். இதிலிருந்து அவசரகாலத்தை முடிவுக்குக் கொண்டு வந்தால், உடன் எதிர்ப்புக் கிளர்ச்சிகளை நாடெங்கும் ஆரம்பிக்க எதிர்க்கட்சிகளில் பல ஆவலுடன் காத்திருக்கிருர்கள் என்பது தெளிவு.

மேலும் அவசரகாலத்தை தீவின் மற்றப் பகுதிகளிலும் பிரகடனம் செய்துள்ளதால்தான் வகுப்புவாதிகள் கிளர்ச்சிகள் செய்யாமல் இருப்பதுடன், சிறுபான்மை சமூகத்தினர் அங்கு ஒருவித நிம்மதியுடன் வாழ முடிகிறதென்றும் இப் பிரகடனத்தை நீக்கிவிட்டால், வகுப்புத் துவேஷ பிரசாரங்களும், கிளர்ச்சிகளும் அங்கு ஆரம்பிக்கலாமென்றும், சிறுபான்மைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களில் சிலர் கருதுகின்ருர்கள்.

பிரதமரும், நிதிமந்திரியும், நாட்டைவிட்டு வெளி தேசத்துக்கு ஏககாலத்தில் வெளியே சென்றதை, ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் டட்லி சேனநாயக்கா சுட்டிக்காட்டி, இவ்விதம் இதுவரை நேர்ந்ததில்லை என்ருர். நாட்டில் அவசர நெருக்கடி இல்லை என்பதற்கு இது ஓர் அத்தாட்சியென்றும் ஆகவே அவசரகாலத்தை முடிவுக்குக் கொண்டுவர வேண்டுமென்றும் மற்ருேர் மெம்பர் வாதித்தார்.

ஆனல் அவசரகாலத்தை முடிவுக்குக் கொண்டு வந்ததும் எதிர்க் கட்சியினர் பல அரசியல் கிளர்ச்சிகளைக் கிளப்பக் கூடுமென்ற அச்சம் அரசாங்கத்துக்கு இருப்பது இயற்கை. ஆகவே அவசரகாலத்தை அவசரப்பட்டு இந்த அரசாங்கம் நீக்குவது சந்தேகமே. இதற்கு மாருக, கூடியவரை இதை நீடிக்கவும், அதற்கிடையே அரசியலில் ஏதும் மாறுதல் செய்யவும் முயற்சிக்குமாயின் அதில் வியப்பில்லை.

### தலைவர்கள் விடுதலை?

அவசரகாலம் நீடித்தாலும், சென்ற மாதம் பலர் தடுப்புக் காவலிலிருந்து விடுதலை செய்யப்பட்டனர். பண்டாரநாயக்கா தினத்தை முன்னிட்டு இம் மாதம் 26ந் திகதி தமிழரசு எம். பி.க்களும், கே. எம். பி. ராஜரத்னவும் விடுதலை செய்யப்படலாமென்றும் "ஈழநாடு" பத்திரிகையில் பிரத்யேகமான செய்தி வெளியாற்று. இப்போதைய நிலைமையை பரிசீலனை செய்து, இம்மாதம் மேலும் பலரை விடுதலை செய்ய அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது என்றும் சபை முதல்வர் ஸி. பி. டி' ஸில்வா அறிவித்தது மேற்குறித்த செய்தியை ஊர்ஜிதம் செய்வதாக இருக்கின்றது.

அக்டோபர் மாதத்தில், செனட் சபையில் காலியான ஸ்தானங்களுக்கான தேர்தல் நடைபெற வேண்டியுள்ளது. ஜனப்பிரதிகள் சபை மெம்பர்கள், செனட்டர்களைத் தெரிவு செய்யவேண்டும். தமிழரசுக் கட்சிம மெம்பர்களை தடுப்புக் காவலில்வைத்திருந்தால் அவர்கள் இத் தேர்தலில் பங்கு பற்ற முடியாமற் போவதுடன், இந்தத் தேர்தலும் ஒழுங்கானதாகாமல் போகும். ஆகவே அதற்குள் தமிழரசு எம். பி.க்களைத் தடுப்புக் காவலிலிருந்து விடுவித்து, இத்தேர்தலில் பங்கு பற்ற அவர்களை அனுமதிக்க மற்ருேர் காரணமுண்டு.

செனட் சபையில் புதிதாக இரு தமிழர்கள் அநேகமாக இடம்பெறலாமென்று அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகின்றது. அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் தலைவர் எம். ஸி. சுப்பிரமணியத்தை அரசாங்கக் கட்சியினர் செனட்டுக்கு நியமிக்கலாமென்றும் தமிழரசுக் கட்சி எம். பி.க்கள், மட்டக்களப்பைச்சேர்ந்த முன்னுள் கூட்டுறவு உதவிக் கமிஷனர் எம். மாணிக்கத்தையோ, அல்லது அவர் விட்டுக்கொடுத்தால், முன்னுள் அட்டர்னி ஜெனரல் எம். திருச்செல்வத்தையோ நியமிக்கலாமென்றும் வதந்திகள் அடிபடுகின்றன.

ஃ ஃ ஃ

### அரசியல் கமிட்டி

இலங்கையைக் குடியரசாக்குவதுடன் வேறு திருத்தங்கள் செய்யவும் ஒரு விசேஷக்கமிட்டியை நியமிக்கவேண்டுமென்று செனட் சபை நிறைவேற்றிய தீர்மானம் பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. இது பார்லிமெண்டில் நிறைவேறி, கவர்னர்ஜெனரல் அங்கீகாரத்தைப் பெற்ற பின், பல அரசியல் கட்சிகளைச் சேர்ந்த எம். பி. க்கள் இதற்கு நியமிக்கப்படுவர். தமிழரசுக் கட்சி எம். பி. க்களும் இதற்கிடை விடுதலை செய்யப்பட்டு, அவர்களிலும் இரண்டொருவர் (அவர்கள் சம்மதித்தால்) இதற்குக நியமிக்கப்படக்கூடும். முன்னர் இதே நோக்கத்துடன் நியமிக்கப்பட்ட கமிட்டியில் இரு தமிழர், எஸ். ஜே. வி. யும், செனட்டர் நடேசனும் அங்கம் வகித்தனர். பின்னர் அதிலிருந்து எஸ். ஜே. வி. விலகினர். முடிவில் அக்கமிட்டி வேலைகளும் அரை குறையாக முடிந்தது.

பிரதேச சபைகள் அமைப்பு அதிகாரம் முதலிய விஷயங்கள் இச்சபையால் நிர்ணயிக்கப்படலாம். பண்டாரநாயக்கா—செல்வநாயகம் ஒப்பந்தத்தில் குறிப்பிட்டிருந்த அதிகாரங்கள் பிரதேசசபைகளுக்கு அளிக்கப்படுமா என்பது இனியே தெரிய வேண்டும்.

எப்படியும் 13 ஆண்டுகளுக்கு முன் அமுலுக்கு வந்த இப்போதுள்ள சோல்வரி அரசியல் திட்டத்தில் பற்பல குறைகள் உள்ளனவென்பதை அரசாங்கமும் உணர்ந்திருக்க வேண்டும். அவசரகாலத்தைப் பல முறையும் பிரகடனம் செய்யவேண்டி ஏற்பட்டதற்குக் காரணம் அரசியல் அமைப்பிலுள்ள அடிப்படைக் குறைதான். இக் குறைகளை கூடுமான வரை தீர்த்து, சிறுபான்மைச் சமூகத்தின் ஒத்துழைப்பையும் ஆதரவையும் பெற்றுலே, நாடு முன்னேற முடியுமென்பதை அரசாங்கம் உள்ளிட்டுப் பல கட்சிகளும் உணர்ந்திருக்கவேண்டும். இப்போதுள்ள அரசியல் முட்டுக்கட்டையைத் தீர்க்க பிரஸ்தாப அரசியல் சீர்திருத்தக் கமிட்டி நல்லதோர் வாய்ப்பாக பயன்படுமா என்பது இனியே தெரிய வேண்டும்.

### இந்தியா—இலங்கை

இந்தியா - இலங்கைப் பிரச்சினைகளைப் பற்றிய பேச்சு வார்த்தைகள் வெகு சீக்கிரத்தில் ஆரம்பமாகுமென்று தெரிகிறது. அதற்குப் பூர்வாங்கமாக டில்லியிலுள்ள இலங்கை ஹைகமினர் சர் ரிச்சர்ட் அலுவிகாரா கொழும்புக்கு வந்திருக்கிருர். நாடற்றவர், சட்டவிரோதக் குடியேற்றம், இந்தியா-இலங்கைவர்த்தகம் இம்மூன்று விஷயங்களைப்பற்றியும் இந்திய அரசாங்கத்துடன் பேச்சுக்கள் நடத்துவதற்கு ஏற்பாடு பற்றி பிரதமருடன் கலந்து பேசவே இங்கு வந்திருப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே மந்திரி கலுகல்ல இந்தியாவுக்குச் சென்று இலங்கை விமான சர்வீஸை இந்திய விமான சர்வீஸுடன் கூட்டாக நடத்த பூர்வாங்கமாக ஒப்புக் கொண்டிருக்கின்ருர். டச்சு முதலிய பல விமான

(5ம் பக்கம் பார்க்க)

## ஐயாறன் எழுதுவது

சென்ற சனிக்கிழமை யாழ்ப்பாண நகர மண்டபத்திலே ஒரு நடன அரங்கேற்றம் நடைபெற்றது. மண்டபம் நிறைய கூட்டம். ஒரு பக்கம் ஆண்கள்; மறுபக்கம் பெண்கள். பெண்கள் கூட்டமே அதிகம். டிக்கெட் கட்டணமில்லை. அழைப்பின்மீது பலரும் வந்திருந்தனர். அழைப்பில்லாமலும் சிலர் வந்திருக்கலாம்.

எப்படியும் மண்டபம் நிறையக் கூட்டமிருந்ததால், அந்த அரங்கேற்றம் சிறப்பாக இருந்தது. ரஸிகர்கள் இருந்தால் தானே கலைஞர்களுக்கு உற்சாகம்!

* * *

தமிழ் மன்னர்கள் ஆட்சி செய்த காலத்திலே இவ்வித நடனம், இன்னிசை, நாடகம் முதலியவற்றுக்கு டிக்கெட் கட்டணம் கிடையாது. கோவில் முதலிய பொது இடங்களிலே கலை விருந்துகள் நடைபெறும். பொது மக்கள் யாரும் தடையின்றி வந்து ரஸிக்கலாம். மன்னர்களோ பிரபுக்களோ அக் கலைஞருக்குப் போதிய சன்மானம் வழங்குவர். ஆகவே எவ்விதமான கலை நிகழ்ச்சிகளுக்கும், கூட்டத்துக்குக் குறைவே இராது.

* * *

கோவில்களில் நடனமாடுவதை இந்தியாவில் சட்டம் போட்டுத் தடுத்துவிட்டார்கள். இங்கும் ஆடக்கூடாதென்று சில சீர்திருத்தக்காரர்கள் கிளர்ச்சி செய்கிருர்கள். இப்போது நடனக்கலை வெகுவாக வளர்ந்து, வீட்டுக்கு வீடு பரவியிருக்கின்றது. நடனம், பாட்டு இவற்றில் தேர்ச்சி பெறும் பெண்ணுக்கு, விவாகப் பிரச்சினை அதிகமிருப்பதில்லை. கலையும் வளர்ச்சி பெற்று புதுமதிப்புப் பெற்றுள்ளது.

கோவில்களோ மக்களுக்கெல்லாம்பொதுவுடைமை.கலைகளை வளர்க்குமிடம். திருவாசகம் போன்ற பக்தி ரஸமான பாடல்களுக்கு அபிநயம் பிடித்து நடனம் ஆடினல், என்ன தவறு. சினிமா முதலிய டப்பாப் பாட்டுக்களை விலக்கி, தெய்வ பக்தியை வளர்க்கக் கூடிய வகையில் கோவில்களில் பரதநாட்டியம் ஆடுவதில் தவறு இருப்பதாக நான் கருதவில்லை. ஊழல்கள் புகுந்திருக்கலாம். அவற்றைக் களைய வேண்டும். மூட்டைப் பூச்சி உபத்திரவத்துக்காக வீட்டையே கொளுத்த வேண்டுமா?

* * *

நேற்று ஒரு கலைஞர் வந்தார். ஒரு கோவில் உற்சவத்தில் தாம் பாடியதாயும் பலரும் பாராட்டியதாயும் கூறிவிட்டு, தமக்குக் குடிக்க ஒரு சோடா கூட கொடுக்கவில்லை என்றும், நன்றி உபசாரம் ஒரு வார்த்தையும் சொல்லவில்லை என்றும் மனம் கொதிக்கக் கூறினர்.

கலைஞர்களை ஆதரித்துப் போற்றுவிடில் கலைகள் எப்படி வளரும்? உபசாரமாக நல்ல வார்த்தை நான்கு சொல்லுவதிலும் நஷ்டமா? கோவில் உற்சவாதிகளில் கலை நிகழ்ச்சிகளுக்கு ஒழுங்கு செய்பவர், கலைஞர்களுக்குச் சிறிதாவது சன்மானமளிக்க வேண்டும். பொன் வைக்குமிடத்தில் பூ வைக்கலாம். ஒன்றுமே கொடாமல் மண் அடிப்பது கலாதேவிக்குச் செய்யும் பாவமாகும்.

# 'ஓவியக்கலை' நூல் வெளியீட்டுவிழா

## சன்மார்க்க சபையின் இலக்கியசேவை

யாழ்ப்பாணம், திங்கள்

"அரிஸ்டாட்டல் காலம் தொடக்கம் இன்றுவரை பல மொழிகளில், கலை என்பது என்ன? என்பதைப்பற்றியும் ஓவியக்கலையைப்பற்றியும் பலப்பல நூல்கள் வெளிவந்திருக்கின்றன. பழந் தமிழ்நூல்களிலும் இடையிடையே பல வகைக் கலைகளைப்பற்றிய குறிப்புரைகள் இருக்கின்றன. ஆனால் ஒழுங்குபடுத்தப்பட்டதும், அளவில் சிறியதாயிருந்தாலும் பொருளில் மேன்மை மிக்கதுமான ஓவியக்கலைஎன்ற இந்நூல் தமிழில் முதன்முறையாக வெளிவருவதைக்கண்டு நான் சந்தோஷப்படுகிறேன். தமிழ்ப்பெருங்கடலுள் ஒருதுளியாக இருப்பினும் அதுமுக்கியமானது; பெருமைக்குரியது என்று சொல்ல ஆசைப்படுகிறேன்."

இவ்வாறு பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் எஸ். சிவபாதசுந்தரம் குரும்பசிட்டி சன்மார்க்கசபையில் நடந்த 'ஓவியக்கலை' என்ற நூல் வெளியீட்டின்போது கூறினர். புகழ்பெற்ற சிப்பாசாரியார் திரு நெல்வேலி ஆறுமுகம் அவர்களின் புத்திரரும், மகாஜனக் கல்லூரி ஓவிய ஆசிரியருமாகிய திரு. தம்பித்துரையால் எழுதப்பட்டதும் குரும்பசிட்டி சன்மார்க்கசபையால் வெளியிடப்பட்டதுமாகிய ஓவியக்கலை என்ற நூலின் வெளியீட்டு விழா சென்ற சனிக்கிழமை குரும்பசிட்டி சன்மார்க்கசபை மண்டபத்தில் நடைபெற்றது.

திரு. சிவபாதசுந்தரம்மேலும் பேசும்போது, இப்படிப்பட்ட நூல்களால் பொதுமக்களின் இரசனைத் திறத்தை உயர்த்துவதோடு நில்லாமல் அவரது சொந்தத் தொழிலான சிற்பக்கலையும் நசிவுருமல் பார்த்துக் கொள்வது ஆசிரியரின் கடமையாகும் என்று குறிப்பிட்டார்.

பதிப்பாசிரியர் கனக. செந்திநாதன் வரவேற்புரையில் பல கஷ்டநஷ்டங்களுக்கிடையே சன்மார்க்கசபையார் சைவநற் சிந்தனைகள், ஓவியக்கலை போன்ற நூல்களை வெளியிடுகிருர்கள் என்றும், இன்னும் மனந்தளராது நாவல், கவிதை, நாடகம் ஆகியவை சம்பந்தமான நூல்களை அடுத்து வெளியிட இருக்கிருர்களென்றும் அவற்றிற்குப் பொதுமக்களும் எழுத்தாளர்களும் கலைஞர்களும் உதவிசெய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

டாக்டர் 'நந்தி' யாழ்ப்பாணப் புத்தக வெளியீட்டுச் சங்கத்தின் ஆரம்பமுயற்சிகளைப் பற்றியும், எழுத்தாளர்கள் கூடிச்செய்யவேண்டிய ஆக்கப் பணிகளைப்பற்றியும் குறிப்பிட்டார். சாகித்திய அக்கடெமியின் சிறுகதைக்குரிய பரிசைப் பெற்றுக்கொண்ட சிறுகதை எழுத்தாளர் டொமினிக்ஜீவா, "இப்போது ஈழத்தில் ஏற்பட்டுவரும் இலக்கிய விழிப்புணர்ச்சியையும், எழுத்தாளர்கள் ஈழத்துப்பொதுமக்களை நம்பி அவர்களை அணுகினல் புத்தக வெளியீட்டால் நட்டமடையத் தேவை ஏற்படாது" என்றும் கூறினர்.

'தமிழன்' பத்திரிகைக் காரியாலயத்தைச் சேர்ந்த சி. சுப்பிரமணியமும், மகாஜனக் கல்லூரி ஆசிரியர் செ. கதிர்வேற்பிள்ளையும் ஆசிரியர் திரு. ஆ. தம்பித்துரையின் கலை ஆர்வத்தைப்பற்றியும் நூலின் தரத்தைப்பற்றியும் விமர்சித்தார்கள். 'சமூகத்தொண்டன்' ஆசிரியர் க.பே. முத்தையா தமிழ்த்தொண்டர் நா. பொன்னையா அவர்களின் பெயரால் இயங்கிவரும் சன்மார்க்கசபையினருக்கு உழைப்பதோடு இப்படியான இலக்கிய சேவை செய்வதை நிச்சயம் எழுத்தாளர்கள் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிருர்கள் எனக் கூறினர். ஓவியக்கலை ஆசிரியர் ஆ. தம்பித்துரை இளைஞகிய தன்னை எழுத்தாளர்களும் பொதுமக்களும் போற்றியமைக்கு நன்றி தெரிவித்தார். சன்மார்க்கசபைக் காரியதரிசி சி. த. இராசரத்தினம் பல இடங்களிலும் இருந்துவந்து வெளியீட்டுவிழாவில் கலந்துகொண்ட எழுத்தாளர்க்கும் கலைஞர்க்கும் நன்றி கூறினர்.

# யாழ்ப்பாண மின்சார விநியோக சீர்கேடு

## மாநகரசபையில் டாக்டர் தர்மலிங்கம் கண்டனம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் மாநகரசபை மாதாந்தக் கூட்டம் சென்ற சனிக்கிழமை நடைபெற்றபோது டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் மாநகரசபை மின்சார விநியோகம்பற்றி பலத்த கண்டனம் தெரிவித்து நீண்ட நேரம் பேசினர்.

ஒப்பந்தப்படி மின்சாரம் விநியோகிக்கப்படாவிடில் வரியிறுப்பாளர் சட்டப்படி வழக்குத் தொடரலாமெனவும் வீதியில் செல்பவர் ஆணே பெண்ணே எனப் பார்த்துக் கொள்ள முடியாத கீழ்நிலையில் மின்சார வெளிச்சம் மங்கலாக இருப்பதாகவும் இது விஷயம் பல தடவை புகார் செய்யப்பட்டும் 9 மாதங்களுக்கு முன்பே நடவடிக்கை எடுக்கப்படுமென வாக்குறுதியளிக்கப்பட்டிருந்தும் இது விஷயத்தில் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படாது மலட்டு மாநகரசபையாக இருப்பது வருந்தக்கூடிய ஒன்றென்றும் இந்நிலை கொழும்புத்துறையில் மாத்திரமல்ல சகல வட்டாரங்களிலும் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

டாக்டர் தர்மலிங்கம் மேலும் கூறியதாவது:

மின்சாரம் பிரச்சினை ஒவ்வொரு மாதமும் திரும்பித் திரும்பி வந்து கொண்டிருக்கிறது. இதைத் தீர்க்க நகர சபை அங்கத்தவர்களால் முடியவில்லை. இந்த விஷயத்தைப்பற்றி நகரசபையின் முதல் கூட்டத்திலேயே கூறியுள்ளேன். நகரம் முழுவதிலும் எல்லா வட்டாரத்திலும்இந்தக் குறை இருக்கிறது. எங்கும் இரவில் ரியூப் லாம்புகள் 7 மணியளவில் பற்றுவதில்லை. தண்ணீர் இறைக்கும் இயந்திரங்களும் வானெலி இயந்திரங்களும் இந்த நேரத்தில் உபயோகிக்க முடியாது. இத்தகைய குறைகள் சொற்ப நாட்களுக்கு இருந்தால் பெரும் குறையல்ல. இதைத் தீர்ப்பதற்கு ஒரு திட்டம் தீட்டி இருந்தால் மன்னிக்கலாம். பொறுக்கலாம்.

எல்லா நகரசபைகளுக்கும் கிராமச் சங்கங்களுக்கும் மின்சார விநியோகத்தால் அதிக வருமானமுண்டு. ஆனல் எங்கள் நகரசபைக்கு இது காரணமாக சொற்ப வருமானமே இருக்கிறது. செவ்வையான மின்சார விநியோகத்தால் இப்பொழுது இருப்பதிலும் இருபது வீதம் வருமானம் அதிகரிக்கும் என்று நான் எண்ணுகிறேன். இன்னும் ஒரு முக்கிய பிரச்சினை என்னவெனில் மின்சாரம் தேவையானவர்களுக்குக் கேட்கும் பொழுது கொடுக்காமல் காலம் தாழ்த்திக் கொடுத்தல் அல்லது கொடுக்க மறுத்துவிடுதல். இது மிக சர்வசாதாரணமாக நடைபெறுகிறது.

நாங்கள் இச்சபையைக் கூட்டி இருக்கும் நோக்கத்தை இப்படிச் செய்வதால் அழித்து விடுகிறோம். ஒவ்வொரு அங்கத்தவரும் தங்கள் தங்கள் வட்டார விஷயத்தை மாத்திரம் பார்த்தால் இப்பிரச்சினை இன்னும் கஷ்டமும் சிக்கலுமாக முடியும். இதை ஒரேமுகமாகப் பார்த்து முழுவதையும் நடத்துவதுதான் இலாபமும் விவேகமான முறையுமாகும்.

இதற்கு ஒரு திட்டம் வேண்டும். இருக்கும் குறைகளைத் தீர்க்க வழி வேண்டும்.

நான் கொழும்புத்துறை டிரான்ஸ்போமர்பற்றித் தை மாதம் தொடக்கம் ஒவ்வொரு கூட்டத்திலும் பேசினேன். சபை ஏற்று சம்மதம் கொடுத்தது. ஒன்றுகூடி நகர தேவைகளைத் திருப்திகரமாக நடத்த நகரசபையையும் நகர சபை அங்கத்தவர்களையும் தெரிந்துவிட்ட இந்த நகர சபை என்ன செய்கிறது? எங்கள் கடமையை செவ்வனே செய்கிறோமா?

இதுபற்றி உதவி மேயர் என். டி. செல்லத்துரை, திரு. கே. எஸ். அழகையா, திரு. ஏ. ஜீ. இராஜசூரியர், திரு. பி. எஸ். சோமசுந்தரம் ஆகியோரும் வற்புறுத்திப் பேசினர்.

மேயர் இதுபற்றிக் கவனஞ் செலுத்துவதாகத் தெரிவித்தார்.

# யாழ்ப்பாணக்கல்லூரிகள் விளையாட்டுப் போட்டியில் 6 புதிய சாதனைகள்

## யாழ்ப்பாண மத்தியகல்லூரிக்கு அதிக புள்ளிகள்

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிவிளையாட்டுமைதானத்தில் நடைபெற்ற யாழ்ப்பாணக் கல்லூரிகள் வருடாந்த விளையாட்டுப்போட்டியில் நூற்றுஐந்தரைப் புள்ளிகளைப் பெற்ற யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி முதலாமிடத்தைப் பெற்று 'யூனே' வெள்ளிக்கிண்ணத்தைச் சுவீகரித்துக்கொண்டது. உடுப்பிட்டி மிஷன் பாடசாலை 33 புள்ளிகளையும் தெல்லிப்பளை யூனியன் கல்லூரி 23 புள்ளிகளையும் பெற்று இரண்டாம் மூன்ரும் இடங்களைப் பெற்றன.

பரிதிவட்டம் எறிதலிலும் (113 அடி), குண்டெறிதலிலும் (நாற்பத்தொரடி மூன்றரை அங்குலம்) தெல்லிப்பளை யூனியன் கல்லூரியைச் சேர்ந்த வி. ஜெயராசசிங்கம் முன்னையசாதனைகளை முரியடித்தார். மத்திய பிரிவில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியைச் சேர்ந்த எஸ். மகேந்திரநாதன் முப்பத்தைந்தரையடி அரையங்குல தூரம் குண்டெறிந்து புதிய சாதனை ஒன்றை நிலை நாட்டினர். யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த என். வை. அரசரத்தினம் 80 யார் தடை தாண்டிப் பாய்தலில் 11·6 விநாடிகளில் ஓடி இன்னேர்சாதனையை நிலைநாட்டினர். 4×110, 4×440 யார் அஞ்சல் ஓட்டப்போட்டிகளிலும் மத்திய கல்லூரி முந்திய சாதனைகளை முறியடித்தது. இதில் 6 புதிய சாதனைகள் நிலைநாட்டப்பட்டன.

### புள்ளி விபரம்

| | |
|---|---|
| யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி | 105 1/2 |
| உடுப்பிட்டி அமெரிக்கமிஷன் | 33 |
| தெல்லிப்பளை யூனியன்கல்லூரி | 23 |
| யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி | 15 |
| சாவகச்சேரி டிரிபேக் கல்லூரி | 19 |
| நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி | 15 |
| புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரி | 12 |
| சுன்னுகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி | 11 |
| தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரி | 10 |
| காங்கேசன்துறை நடேஸ்வரக் கல்லூரி | 7 |
| கொக்குவில் இந்துக் கல்லூரி | 4 |
| அருணோதயக் கல்லூரி | 3 |
| மானிப்பாய் இந்துக் கல்லூரி | 3 |
| சாவகச்சேரி இந்துக் கல்லூரி | 2 |
| கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரி | 1 1/2 |
| யாப்பாணம் பரமேஸ்வரக் கல்லூரி | 1 |
| வண்ணர்பண்ணை வைத்தீஸ்வர வித்தியாலயாசாலை | 0 |

1960-ம் ஆண்டு சிறந்த உதைபந்தாட்டத்துக்கான வெள்ளிக் கிண்ணம் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு வழங்கப்பட்டது.

கீழ்ப்பிரிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த பி. இராமநாதனும், மத்திய பிரிவில் உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரியைச் சேர்ந்த ஏ. இராஜராஜனும், மேற்பிரிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியைச் சேர்ந்த ஆர். சாந்தகுணநாதனும் சாம்பியன்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இப்போட்டிகளுக்கு டாக்டர் ஜே. எஸ். அமரசிங்கம் தலைமை தாங்கினர். திருமதி அமரசிங்கம் பரிசில்களையும் பத்திரங்களையும் வழங்கினர்.

## அரசியல் முட்டுக்கட்டை...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

சர்வீஸ்கள் முன்வந்திருப்பினும் ஏர் இந்தியாவுடன் புதியஉறவு கொள்ள ஏர் ஸிலோன் ஒப்புக் கொண்டிருப்பது, இரு அரசாங்கங்களுக்கும் நல்லுறவு வளர்ந்து வருவதற்கு ஓர் அறிகுறி. சூழ்நிலை நல்லதாகி வருவதால் இருதரப்பினரும் பரஸ்பரம் விட்டுக் கொடுத்து மேற் குறித்த பிரச்சினைகளை இம்முறை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளலாமென்ற நம்பிக்கை பலப்பட்டுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் டட்லி சேனநாயக்காவும் கூட நேருஜி பிரதமராக இருக்கையிலேயே இப்பிரச்சினைக்கு நல்ல முடிவு காண வேண்டுமென்று பார்லிமெண்டில் வற்புறுத்தியுள்ளது குறிப்பிடத்தக்கது.

### 55 வயது

55 வயதானவர்களை அரசாங்க உத்தியோகத்திலிருந்து கட்டாயமாக விலக்க வேண்டுமென்ற யோசனையை அரசாங்கம் புனராலோசனைசெய்து மாற்றலாம் என்று சென்ற வாரம் இப்பத்திகளில் குறிப்பிட்டிருந்தேன். பிரதமர் திரும்பியதும் இதுபற்றி யோசித்து அந்த உத்தரவை வாபஸ் பெற்றுவிட்டனர். பிடிவாதம் காட்டாமல், தங்கள் உத்தரவை மாற்றிக் கொள்ள அரசாங்கம் முன்வந்தது நல்ல அறிகுறியாகும். இதனல் பல அரசாங்க ஊழியருக்கு ஆறுதல் கிடைத்துள்ளதுடன், நிர்வாகமும் திடீரென சீர்குலையாமல் தடுக்கப்பட்டுள்ளது.

# பரீட்சை மூலம் தேர்வு: சம்மேளனம் ஆட்சேபம்

கொழும்பு, ஞாயிறு

சிவில் சேவையிலும், வெளிநாட்டுசேவையிலும் மற்றைய நிருவாக ஸ்தாபனங்களிலும் கடமையாற்றுவதற்குப் புதிய சேவையாளர்களை பரீட்சையொன்றின்மூலம் தெரிவுசெய்யவிருக்கும் பிரேரணைக்கு அரசாங்க சேவைத்தொழிலாளர் தொழிற்சங்க சம்மேளனம் தற்காலிக நிதிமந்திரிக்கு அனுப்பிய மகஜர் ஒன்றின் மூலம் தனது ஆட்சேபனையைக் காட்டியுள்ளது.

அம் மகஜர் மேலும் தெரிவித்திருப்பதாவது:-

"செப்டம்பர் 15-ம் திகதி அரசாங்க சேவையாளர் தெரிவு பற்றி அரசாங்க சேவைக் கமிஷன் வெளியிட்ட கெசற் விளம்பரத்தினல் எத்தனையோ அரசாங்க சேவையாளர் தமக்கு உரிய பதவி உயர்வுகளையும் இழக்கவேண்டி நேரிடும். அவ் விளம்பரம் அரசாங்க சேவையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதாகவுமில்லை. சம்பளக் கமிஷனின் சிபார்சுகளுடன் ஒத்துப் போவதாகவுமில்லை.

சம்பளக்கமிஷனின் அறிக்கையோடு ஒத்துவரக்கூடியதாகவோ அன்றி அதன் சிபார்சுகளுக்கு ஏற்றதாகவோ அரசாங்கம் ஒருபோதும் நடந்ததில்லை. சம்பளக்கமிஷனின் சிபார்சுகளுக்கேற்ப அரசாங்கசேவைகளை அரசாங்கம் ஒருமுகப்படுத்தவில்லை. எனவே அரசாங்க நிருவாக பகுதிகளுக்கு ஆட்களைத் தெரிவுசெய்வதற்கான பரீட்சையொன்றை அரசாங்க சேவைக் கமிஷன் ஏன் விரைந்து நடத்தவேண்டும்?

சிவில் சேவையிலும் வெளிநாட்டு சேவையிலும் உள்ள காலியான ஸ்தானங்களைமட்டும் நிரப்பும் வகையில் அதற்கேற்ப பரீட்சை நடாத்தவேண்டும்.

## பால்யக்குற்றவாளிகள் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஞாயிறு

பால்யக் குற்றவாளிகளின் தொகை சென்றவருடம் 30 சதவீதம் கூடியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டும் எண்ணிக்கை கூடியுள்ளது. இதற்குக்காரணம் வறுமைதான் என சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கருதுகின்ருர்கள்.

14 வயதிலிருந்து 16 வயதுவரையுள்ள பால்யக் குற்றவாளிகளின் தொகை அதிகரித்துள்ளது. இவர்கள் செய்த குற்றங்களில் 50 வீதமானவை திருட்டுக்குற்றங்களே.

அடுத்தமாதம் 2-ம் திகதி சர்வதேசக் குழந்தைகள்தினம். இலங்கையில் குழந்தைகள் பராமரிப்பு இலாகா இத்தினத்தை குழந்தைகள் பராமரிப்பு தினமாக கொண்டாடத் தீர்மானித்துள்ளது.

# அண்ணனும் தம்பியும் கொலை!

## ஜனக்கூட்டம்வேடிக்கைபார்த்தது

### மார்ட்டின் வீதி இரட்டைக் கொலையில் தாயார் சாட்சியம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
யாழ்ப்பாணம் மார்ட்டின் வீதி இரட்டைக் கொலை சம்பந்தமாக யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் திரு. அரசு வால்டன் நேற்று விசாரணை நடத்தினர்.

இறந்தவர்களின் தயாரான மனுவேல்பிள்ளை அன்னம்மா என்ற விதவை சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

தொழிலாளரான அருளானந்தம் துரைராசாவும், விவேகானந்த அச்சகத்தில் வேலை செய்யும் செல்வம் மரியதாசும் எனது மக்கள். என்னுடனேயே வாழ்ந்து வந்தார்கள். செல்வம் அச்சகத்துக்குப் போவதாகச் சொல்லி இரவு ஏழரை மணியளவில் வீட்டிலிருந்து வெளியே சென்றார். கடைக்குப் போவதற்காக நானும் அவர் பின்னால் சென்றேன். 'சிம்பிளி' என்றழைக்கப்படும் குணரத்தினத்துடன் செல்வம் பேசிக் கொண்டு நின்றார். சந்தியில் செல்வம் மரியதாசுக்கும் 'சிம்பிளி'க்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. நான் மரியதாசிடம் வேலைக்குப் போகுமாறு சொன்னேன். தனித்தனியே சண்டையிட வருமாறு மரியதாசிடம் குணரத்தினம் சவால் விட்டார். வீட்டிலிருந்து வந்த துரைராசா என் சொற்படி தம்பியார் மரியதாசை வீட்டுக்குக் கூட்டிச் சென்றார். எங்கள் படலையில் அவர் சென்று கொண்டிருக்கையில் குணரத்தினம் திரும்பவும் சவால் விடுத்தார். துரைராசா குணரத்தினத்தைப் போகுமாறு கேட்டுக் கொண்டார். குணரத்தினம் வேலியால் பாய்ந்து சென்று கிறீஸ் போன்ற 9 அங்குல நீளமுள்ள ஒரு ஆயுதத்துடன் தனது வீட்டிலிருந்து திரும்பவும் வந்தார். வந்தவர் மரியதாசின் நெஞ்சில் குத்திக் கிழித்திழுத்தார். துரைராசா மரியதாசை நோக்கிச் சென்றபோது அவருக்கும் கழுத்தில் குத்து விழுந்தது. மரியதாஸ் ஸ்தலத்திலேயே விழுந்துவிட்டார். துரைராசா கேட்டைப் பிடித்துக் கொண்டு சில அடி தூரம் சென்றதும் கீழே விழுந்துவிட்டார். அப்பொழுது முத்தம்மாள் வீட்டிலிருந்து திரும்பிய எனது மகள் பாக்கியம், துரைராசாவின் தலையை தனது மடியில் தூக்கி வைத்து அழுதுகொண்டிருந்தார். ஒரு பெருஞ்சனக் கூட்டம் அப்பொழுது அங்கே வந்து நின்றது. ஆயினும் எவரும் உதவிக்கு வரவில்லை. வெறுமனே நின்று பார்த்துக் கொண்டிருந்தார்கள். குணரத்தினம் எனது சொந்தக்காரர். எதுவித மனக்கசப்பும் இதற்குமுன் இருந்ததாக எனக்குத் தெரியாது."

யாழ்ப்பாணம் பொலிசைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் திரு. எம். வல்லிபுரம் சாட்சியங்களை ஆஜர் செய்தார்.

பின்னர் கிடைத்த செய்தியின்படி 'சிம்பிளி' என்றழைக்கப்படும் குணரத்தினத்தை சந்தேகத்தின்மீது யாழ்ப்பாணம் பொலிசைச் சேர்ந்த கமால்தீன் கைது செய்துள்ளாரெனத் தெரிகிறது.

---

## சென்னை வரும் பொலிஸ் நாய்

சென்னை, செப். 15
பேராளத்தைச் சேர்ந்த குருனே என்ற சிறந்த பொலிஸ் நாய் பயிற்சிக்காக சென்னைக்கு வருகிறது. இந்தியாவிலுள்ள சிறந்த பொலிஸ் நாய்களில் குருனேவும் ஒன்று. சென்னையில் அது 15 நாள் பயிற்சிபெறும்.

---

ஆசிரியருக்குக் கடிதம்

## மீன்பிடித் தொழிலுக்கு உதவி

அரசாங்கம் சிலவருடங்களாகவே யந்திர சாதனங்களுள்ள மீன்பிடி வள்ளங்களை மீன் பிடிப்பவர்களுக்குக் கடனாக உதவிவந்துள்ளது. இது மேலும் பரவலாகச் செய்யப்படவிருக்கின்றதெனத் தங்கள் பத்திரிகை மூலம் அறிந்து மகிழ்ச்சியடைகின்றேன். இலங்கையின் பொருளாதார வளத்தைக் கூட்டுவதற்கு இதனை மிகப்பெரும் அளவில் செய்தல் வேண்டும்.

முக்கியமாக பிரதான மீன்பிடித்துறைமுகங்களில் குளிர்சாதன வசதிகள் அமைக்கப்படல் அவசியமாகும். இதனையும் அரசாங்கம் உணர்ந்து அதற்கென்றே முதலையும் வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கி வைத்திருப்பதும் வரவேற்கத் தக்கது.

ஆனல், நிறுவப்பட இருக்கும் குளிர்சாதன நிலையங்கள் ஒன்றும் வடமாகாணத்தில் இருக்காததது வருந்தத்தக்க விஷயம். தாழையடி, மயிலிட்டி போன்றஇடங்களில்வருடத்தில் சில மாதங்களில் மிகப்பெரும் அளவில் மீன்கள் பிடிக்கப்படுகின்றன. மற்றைய மாதங்களில் நெடுந்தீவில் பிடிக்கப்படுகின்றன. இவற்றின் தொகையை இன்னமும் அதிகமாக்கலாம். ஆனல் இப்பொழுது குளிர்சாதன வசதிகள் இவ்விடங்களில் இல்லாமையால், மீன்பிடிப்பவர்கள் தாங்கள் பிடித்த மீன்களை உடனடியாகக் கரைக்குக் கொண்டுவந்து விற்கவே முனைகின்றார்கள். அவை பழுதடைந்து விட்டால் விலை மிகக் குறையும் இதனல் சில முதலாளிமார்களுக்கு நல்ல வாய்ப்பு. பிடிக்கப்பட்ட மீன்களை எது விதத்திலும் கிடைத்த விலைக்கு விற்கத்தானே வேண்டும்.

இப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உடனடியாக காங்கேசன் துறையிலும் குளிர்சாதன வசதிகள் செய்து கொடுக்க வேண்டும். இத்துறைமுகஅபிவிருத்தி செய்யப்படவிருக்கின்றது. இதற்கு அருகிலிருக்கும் கடல்களிலேயே பெரும்அளவில் மீன்கள் உள்ளன. பெரியோர்கள் எல்லோரும் ஒருமுகமாக அரசாங்கத்தை வற்புறுத்தி இங்கும் நல்லமுறையில் இயங்கும் மீன்பிடி நிலையத்தை நிறுவச் செய்யவேண்டும். எவர் செய்தாலென்ன? நாடு நலம் பெற உழைப்பதில் பெருமையையோ பிரதியுபகாரத்தையோ எதிர் பார்க்க வேண்டியதில்லை.

பத்திரிகைகளும் இவ்விஷயத்தில் ஊக்கமெடுத்துப் பிரசாரம் செய்யவேண்டும். 'ஈழநாடு' தினசரிப் பத்திரிகையும் இவ்விஷயத்தில் உழைத்து இக்காரியத்தை செய்து முடித்தால் தமிழ்மக்கள் என்றென்றும் கடமைப்பட்டவர்களாவார்கள்.

வீ. இராமகிருஷ்ணன்
171, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

---

## தேயிலை ஏற்றுமதி வரி

### பாகிஸ்தான் குறைத்தது

கராச்சி, செப். 17
தேயிலை ஏற்றுமதி வரியை பாகிஸ்தான் அரசாங்கம் குறைத்ததற்கு பாகிஸ்தான் தேயிலை உற்பத்தியாளர் சங்கம் மகிழ்ச்சி தெரிவித்துள்ளது. வரிக்குறைப்பு தேயிலை உற்பத்தியை அதிகரிப்பதற்கு ஊக்கமளிக்கும் என்று அந்தச் சங்கம் தெரிவித்தது.

---

## 'புதுப்பாதை வகுத்தவர் பாரதி'

### சிவானந்த வித்தியாலயத்தில் பாரதிவிழா

காத்தான்குடி, செப். 17
"இலக்கியத்துறையில் பாரதியால் விளைந்திருக்கும் மறுமலர்ச்சி வியக்கத்தக்கதொன்றாகும். பழைய கருத்தைப் புதிய மெருகுடன் 'பாஞ்சாலி' சபதத்தில் தீட்டியுள்ளான் வரகவிபாரதி. எழுச்சிநிறைந்த நடை, விழிப்புமிக்க சொல்லாட்சி, மறுமலர்ச்சிக்கனல் தெறிக்கும் சந்தம். இத்தனை புதியகருத்துடைய இலக்கியப் புதுப்பாதையைச் சமைத்த சான்றோனை நாம் போற்றவேண்டும்."

இவ்வாறு கல்லடி உப்போடை சிவானந்த வித்தியாலயத்தில் நடந்த 'பாரதிவிழா'வில் பேசிய கவிஞர் 'ராஜபாரதி' குறிப்பிட்டார். விழாவுக்கு வித்தியாலய அதிபர் திரு. க. கணபதிப்பிள்ளை தலைமை வகித்தார். திரு. கே. பாலசுந்தரம் பாரதியின் போதனைகளை எடுத்து விளக்கினர்.

---

## கிணற்றுள்விழுந்த கிழவர் மரணம்

யாழ்ப்பாணம், ஞாயிறு
சுதுமலை வடக்கு வயிரமுத்து கந்தையா (வயது 60) என்பவர் கிணற்றுள் விழுந்து மரணமானது சம்பந்தமாக பதில் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். வி. கதிரவேலு விசாரணை நடத்தினர்.

பகல் வேலைக்குச் சென்று வீடுதிரும்பிய வயிரமுத்து கந்தையா இரவு 9.30 மணியளவில் கால் முகங்கழுவுவதற்காக கிணற்றடிக்குச் சென்றாரென்றும், தண்ணீர் வற்றிப்பட்டைக் கிடங்குக்குள்மாத்திரம் சிறிது தண்ணீர் இருந்ததாகவும் துலாவை எட்டியிழுத்து தண்ணீர் எடுக்க முயன்றபோது தண்ணீரில்லாத 'மலை'யில் அவர் விழுந்து அதனல் தலையில் பெரியகாயமும் உடம்பில் சிறு சிறு காயங்கள் ஏற்பட்டதாகவும் சார்மனைக் கதிரைமூலம் அவரைவெளியே எடுத்து மானிப்பாய் ஆஸ்பத்திரியிலிருந்து யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரும் வழியில் இறந்துவிட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

டாக்டர் கே. கனகரத்தினம் பிரேத பரிசோதனை நடத்தினர்.

பதில் திடீர்மரண விசாரணை அதிகாரி இது விபத்தினல் ஏர்பட்ட மரணமெனத் தீர்ப்பளித்தார்.

---

நாவலப்பிட்டி, ஞாயிறு
கவியோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியார் மலாயாவிலிருந்து தாயகம் திரும்பும் வழியில் அக்டோபர் மாதமத்தியில் இலங்கைக்கு விஜயம் செய்வாரெனத் தெரியவருகிறது.

---

# 'இரத்தவெள்ளத்தில் இறந்து கிடந்தார்'

## உரும்பராயில் ஒருவர் கொலை: மகன் கண்ட கோரக் காட்சி

யாழ்ப்பாணம், ஞாயிறு
உரும்பிராய் வடக்கைச் சேர்ந்த சின்னட்டியன் நாகமுத்து என்பவர் கொலைசெய்யப்பட்டது சம்பந்தமாக யாழ்ப்பாணம் மாஜிஸ்ரேட் திரு. அரசு வால்டன் விசாரணை நடத்தினர்.

இறந்தவரின் மனைவியான நாகமுத்து பூதி சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

'கடந்த 15-ந் திகதி மாலை 6-30 மணியளவில் இறந்தவர் கோவிலால் வீடுதிரும்பியிருந்தார். அவர் மோதகம், கடலை, இனிப்பு ஆகியவை கொண்டு வந்தார். அவர் வீட்டு வராந்தையிலிருந்தார். நான் அவருக்கெதிரில் முற்றத்தில் இருந்தேன். தோட்டத்துக்குச் சென்றுதிரும்பியிருந்த எனது மகன் நடேசுவும் எனக்குப் பக்கத்திலிருந்து கடலையும் மோதகமும் சாப்பிட்டுக்கொண்டிருந்தான். பொன்னனின் மக்களான சின்னத்துரை, நாகமுத்து, சின்னத்தம்பி ஆகிய மூவரும் ஆயுதங்களுடனும் பொல்லுகளுடன் அங்கு வந்தனர். அப்பொழுது இரவு 7 மணியிருக்கும். அவர்கள் ஏன் வந்தார்கள் என்பதுபற்றி எனக்குத் தெரியாது. எங்கள் வீட்டு வராந்தையில் பித்தளை விளக்கொன்று எரிந்துகொண்டிருந்தது. "உனக்கும் உனது மருமகனுக்கும் நாட்டாண்மை வந்திட்டுதோ" எனச் செல்லத்துரை கேட்டுக்கொண்டு வந்தார். "நீங்கள் என்ன செய்யப்போகிறீர்கள் ?" என்று எனது கணவர் பதிலுக்குக் கேட்டார். செல்லத்துரை எனது கணவன்மீது ஏதோ ஓர் ஆயுதத்தால் குத்தினர். நாகமுத்து பொல்லால் அடித்தார். அந்த அடி பின்பக்கக் கழுத்தில் விழுந்தது. நானும் மகனும் குழறினேம். பயம்காரணமாக எனது மகன் அங்கிருந்து ஓடிவிட்டான். நாகமுத்து வைத்திருந்த பொல்லைப் பறிக்க முயற்சித்தேன். ஆனல் நான் கீழே விழுந்து விட்டேன். எரிந்துகொண்டிருந்த விளக்கும் அணைந்துவிட்டது. எனது கணவர் விழுந்து விட்டார். இரத்தம் பெருக்கெடுத்தோடியது. அவர் பேசவே இல்லை. நான் சத்தமிட்டேன். பலரும்அங்குவந்து சேர்ந்தார்கள். எதிரிகள் மூவரும் ஓடிவிட்டனர்.

பதினெட்டு வயதான நாகமுத்துவின் மகன் நடேசுவும் இவ்வாறே சாட்சியமளித்தார். ஆனல் தான் திரும்பிவந்தபோது தகப்பனர் இரத்த வெள்ளத்தில் இறந்துகிடப்பதைக் கண்டதாகச் சொன்னர்.

சுன்னகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு கே. செபமாலை சாட்சியங்களை ஆஜர்செய்தார்.

சந்தேகத்தின்மீது பொன்னன் செல்லத்துரை, பொன்னன் சின்னத்துரை, பொன்னன் நாகமுத்து, பொன்னன் நடேசு ஆகியோரைப் பொலிஸார் தேடுகின்றனர்.

இது சம்பந்தமாகப் பொலிஸார் புலன்விசாரணை செய்து வருகின்றனர்.

---

## வலிகிழக்கு பாசாலைகள் பேச்சுப் போட்டி முடிவு

நீர்வேலி, ஞாயிறு
வலிகாமம் கிழக்கு ஆசிரியர் சங்கத்தினல் பாடசாலைகளுக்கிடையே கடந்த சனிக்கிழமை புத்தூரில் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் வெற்றியீட்டியவர்கள் விபரம் வருமாறு:-

**ஆங்கிலப் பகுதி**

மத்திய பிரிவு ஆண்: 1 எஸ். ஸ்ரீதரன், 2. எஸ். சிவஞானம்.

மத்திய பிரிவு பெண்:-1. கே. விமலாதேவி, 2. ஏ. சுகிர்தராணி.

கீழ்ப் பிரிவு ஆண்:- 1. கே. பத்மகாந்தன், 2. பி. பாக்கியநாதன், 3. ஏ. முகுந்தன்.

கீழ்ப் பிரிவு பெண்:- 1. ஏ. இந்திராணி, 2. கே. புவனம்பிகை, 3. கே. சிவஞானேஸ்வரி.

**தமிழ்ப் பகுதி**

மேற் பிரிவு ஆண்:- 1. எஸ். வைகுந்தநாதன், 2. எஸ். பரமேஸ்வரன்.

மேற் பிரிவு பெண்:- 1. பி இராசமணி.

மத்திய பிரிவு ஆண்:- 1. கே எஸ். தேவராசா, 2. வி. தட்சணமூர்த்தி, 3. டி. தங்கத்துரை.

கீழ்ப்பிரிவுஆண்:-1.கே. பம்மகாந்தன். 2. பி. செல்லவேல், 3. கே. பாலச்சந்திரன்.


வருக! வருக!!

சுகாதாரத்துடனும் சுவைமிக்க காலைப் பலகாரம் காப்பியுடனும் இரவு, பகல், இரு வேளைகளிலும் விருப்பத்துக்குத் தகுந்தவாறு சைவம் அல்லது மீன் மாமிசத்தோடு ருசியான சாப்பாடு உண்டு.

இன்றே விஜயம் செய்யுங்கள்

எஸ். எம்.
வைத்திலிங்கம்பிள்ளை
408, மெயின் வீதி, மாத்தளை



குனேகா செண்டுகள்

வாழ்க்கை மலர்ச்சியுற உலகப் புகழ்பெற்ற
குனேகா மருக்கொழுந்து உபயோகித்து ஆனந்தமடையுங்கள்

தயாரிப்பவர்கள்:
குனேகா அடையார்
மதராஸ் 20.

இலங்கை சோல் ஏஜண்டுகள்:
ஜெகஜோதி அன் கோ,
குருநெனியா.

## 'பௌத்த சங்கத்தின்மீது அரசாங்கம் பழிவாங்குகின்றது'

கதிர்காமம், வெள்ளி

"பௌத்த சங்கம் எப்பொழுதும் சாசனத்தையும் தேசத்தையும் பாதுகாக்கவே பாடுபட்டுள்ளது. இன்றும் சாசன கமிஷனின் அறிக்கையால் சாசனத்துக்கு வரும் பேராபத்தைத் தடுக்கவே சங்கம் முயன்றுவருகிறது."

இவ்வாறு திசமாரகம ஆலயத்தின் தலைமைக் குருவான வண. கணகம இந்தசார கதிர்காமத்தில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறியதாவது:

தானம் பெற்றே சங்கம் வாழ்வதால் சிலர் சங்கத்தைப் பற்றிக் குறைவாகக் கணிக்கலாம். ஆனால் சங்கத்தின் முக்கியத்துவம் பற்றியும் சங்கம் சமுகத்துக்கு ஆற்றிவரும் சேவை பற்றியும் பௌத்த உலகம் அறிந்துள்ளது. சாசனமும் தேசமும் பிரிக்கப்பட முடியாதவை. சாசனத்தின் நிலை தாழ்ந்தால் பௌத்த கலாசாரம் மறைந்துபோகும்.

வண. ரணே ஆனந்ததேரோ பேசியதாவது:

"நாட்டில் குழப்பநிலை ஏற்பட்டபோது நாட்டைப் பாதுகாக்க முன்வந்தது சங்கம் தான். முன்னர் சங்கம் கூறியவற்றை ஆட்சியாளர் செவிசாய்த்தார்கள். இப்பொழுதுள்ள ஆட்சியாளர் சங்கத்தின் மீது பழிவாங்க எண்ணுகின்றார்கள்."

பிரிட்டிஷ் ஆட்சியின்போது சமாதானம், சுதந்திரம், பாதுகாப்பு,பொருளாதாரநிலை சகலதும் நல்லநிலையில் இருந்தன. மனித உரிமையை முறியடிக்க பிரிட்டிஷ் அரசாங்கம் ஒருபோதும் முயலவில்லை. இன்று நாட்டில் ஒழுங்குமுறை இல்லை. கதிர்காமக் கடவுளிடம் ஒரு மகஜர் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அவர் நீதி செலுத்துவார் என நம்புகின்றோம்."

## தூரகிழக்கு செல்லும் வர்த்தக தூதுகோஷ்டி

கொழும்பு, வெள்ளி

உணவு வர்த்தக அமைச்சைச் சேர்ந்த 2 பேரடங்கிய வர்த்தகத் தூதுகோஷ்டி ஒன்று தூரகிழக்கு நாடுகளுக்குச் செல்கிறது. சீனா, பர்மா, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்குச் சென்றுவிட்டு, அடுத்தமாதம் தூதுக்கோஷ்டி இலங்கை திரும்பும்.

## அரசாங்க சேவை குமாஸ்தாக்கள் மகிழ்ச்சி

கொழும்பு, வெள்ளி

விஞ்ஞானம் தொழில்நுட்ப ஊழியர்களைத் தவிர இதர அரசாங்க ஊழியர்கள் 55 வயதுக்குப் பின் ஓய்வுபெற வேண்டும் என்ற நியதியை மந்திரிசபை ரத்துச்செய்துள்ளதை அரசாங்க சேவைக் குமாஸ்தாக்கள் மகிழ்ச்சியுடன் வரவேற்றுள்ளது.

55 வயதடைந்த ஊழியர்களை இளைப்பாறும்படி கேட்டுக்கொள்வதென அரசாங்கம் தீர்மானித்த காலம் தொடக்கம் அரசாங்க ஊழியர்கள் யாவரும் இவ்விஷயம் பற்றி சந்தேகத்துக்குள்ளாகியிருந்தார்கள். இன்று அத்தீர்மானம் ரத்துச்செய்யப்பட்டதால் அவர்களுடைய சந்தேகம் நீங்கியிருப்பதாக அரசாங்க சேவைக் குமாஸ்தாக்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

55 வயதான ஊழியர்கள் ஓய்வுபெறவேண்டும் என அரசாங்கம் தீர்மானம் செய்தநாள் தொடக்கம் குமாஸ்தாக்கள் சங்கம் இத்தீர்மானத்துக்கு எதிர்ப்பு காட்டி வந்தது.

இதே மாதிரியாக அரசாங்கம் அபிவிருத்தி வரியையும் ரத்துச் செய்யுமெனத் தாம் எதிர்பார்ப்பதாகச் சங்கம் கூயுள்ளறிது

## பரிசோதகர் நியமனம் சபை தீர்மானப்படி நடந்தது

யாழ்ப்பாணம், வெள்ளி

"வடஇலங்கைச் சங்கீத சபைப் பரீட்சையின் இவ்வாண்டுக்குரிய பரிசோதகர்கள் சங்கீத சபை முன் கூடித் தீர்மானித்த தீர்மானத்திற்கும் அறிக்கைக்கும் ஏற்றதாகவே திருப்தியான முறையில் சபைத் தலைவரால் நியமிக்கப்பட்டுள்ளனர்." இவ்வாறு வட இலங்கைச் சங்கீத சபையின் நிர்வாகக் குழுவினரின் கூட்டமொன்று வித்தியா கந்தோரில் வட இலங்கை சங்கீத சபைத் தலைவரும் வித்தியாதிகாரியுமாகிய திரு. எஸ். யூ. சோமசேகரம் தலைமையிற் கூடிய கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.


# ஒரு கரண்டிபாலின் தரத்தை எந்தத் தேநீரும் மீறமுடியாது




## இலங்கைத் தேநீரை அறியும்!

இலங்கை தேநீரை அறியும்! இது "மில்க்மெயிட்"டையும் அறியும்— இந்தச் சிறந்த பால் தேநீர் பருகுவதில் இன்பத்தையும் அதிகரிக்கும். உங்களுக்குச் சிறந்த—மிகவும் சுத்தமான பால் எனத்தெரிவு செய்யப்பட்டு நெஸில்ஸ் ஸ்தாபனத்தாரால் தயாரிக்கப்பட்டது. இது மிகவும் சிறந்த ரகமும் பணத்துக்கேற்ற நிறைந்த பெறுமதியும் கொண்டது. எப்பொழுதும் "மில்க்மெயிட்" பாலையே கேட்டுவாங்குங்கள்.

தேனீர் தயாரிப்பதற்கான ஐந்து பொன்னான விதிகள்:

* பக்கெட்டில் அடைக்கப்பட்ட திறமான தேயிலை
* உஷ்ண தேநீர்ப் பானை
* ஒருவருக்கு ஒரு கரண்டிப் பால். பானைக்கு ஒன்று:
* சுத்தமாக கொதித்த வெந்நீர்
* 3-4 நிமிடங்களுக்கு ஊற விடுதல்.

ஆனால்! "மில்க்மெயிட்" பாலை எப்போதும் மறவாதீர்கள்.




"மில்க்மெயிட் பால்" — சிறந்த பால்


## வானொலி நிகழ்ச்சிகள்

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**திங்கள் 18-9-61**

காலை 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 கிறிஸ்தவ நற்சிந்தனை, 7-15 காலைக் கதிர், 7-30 திரை இசை, 8-15 இஸ்லாமியகீதங்கள்.

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 ஒலிப் பதிவுகள், 5-45 திரை இசை, 6-15 கிராமசஞ்சிகை, 6-45 வாத்தியக் கோஷ்டி.

இரவு 7-00 நேயர்விருப்பம், 7-30 நாகேஸ்வரி சபாபதி - வீணை, 8-00 இஸ்லாமியநிகழ்ச்சி, 9-15 பொன். முத்துக்குமாரன் - பேச்சு, 9-30 ஜி. பழனிவேல் - பாட்டு.

### திருச்சி

(செய்திகள்: காலை 7-15, பகல் 2, இரவு 7-15.)

காலை 6-45 மங்களஇசை, 6-50 துதிப்பாடல்கள், 7-00 வாத்தியஇசை, 7-10 நிகழ்ச்சிக் குறிப்புகள், 7-30 கே. ஆர். சாந்தா - பாட்டு.

பகல் 12-00 தொழிலாளர்களுக்கு, 12-30 நடுத்தரப்பள்ளிகளுக்கு, 1-00 கே. ராமச்சந்திரஐயர் - பாட்டு, 1-30 வாத்தியஇசை, 1-50 குரல்இசை.

மாலை 4-45 விவிதபாரதி (கர்நாடகசங்கீதம்), 5-15 இசைப் பயிற்சி, 6-15 கிராம நிகழ்ச்சிகள்.

இரவு 7-40 திரைப்பட இசை, 8-00 கே. ராமச்சந்திர ஐயர் - பாட்டு, 8-30 கே. ஆர். சாந்தா - பாட்டு, 9-15 இசைக் கோவை, 9-30 ரேடியோ இசை அரங்கு.

## உத்தியோகத்தருக்குப் பிரியாவிடை

உடுப்பிட்டி, வெள்ளி

வடமராட்சி கிருஷிகஇலாகா உணவு உற்பத்தி உத்தியோகத்தர் திரு. சி. வல்லிபுரம் கிளிநொச்சிப்பகுதிக்கு மாற்றலாகிச் செல்வதை முன்னிட்டு கரவெட்டி மேற்கு இளம் விவசாயிகள் சங்கத்தினர் பிரியாவிடை அளித்தனர்.

திருவாளர்கள்: ஏ. எம். பொன்ராசா, க. சிவபாலசிங்கம், எஸ். சண்முகம் ஆகியோர் அவரது சேவையுணர்ச்சியைப் பாராட்டிப் பேசினர். திரு. வல்லிபுரம் நன்றி தெரிவித்தார்.

## தாச்சி விளையாட்டு போட்டி

மாவிட்டபுரம், வியாழன்

தெல்லிப்பழை காந்தி விளையாட்டுக் கழக 2-ம் பிரிவு கோஷ்டிக்கும் போயிட்டி விளையாட்டுக் கழக 2-ம் பிரிவு கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற தாச்சிப்போட்டியில் காந்தி விளையாட்டுக் கழகம் 10 பழங்களும் போயிட்டி விளையாட்டுக் கழகம் 13 பழங்களும் எடுத்தன.

போயிட்டி விளையாட்டுக் கழகம் 3 பழங்களால் வெற்றியீட்டியது. கே. சுந்தரமூர்த்தி மத்தியஸ்தராகக் கடமையாற்றினர்.

## டிறிபேக்கல்லூரி வெற்றி

மாவிட்டபுரம், வெள்ளி

சாவகச்சேரி டிறிபெக் கல்லூரி 1-ம் பிரிவுக்கும் தெல்லிப்பழை யூனியன்கல்லூரி 1ம் பிரிவினருக்குமிடையே நடைபெற்ற வலைப்பந்தாட்டப்போட்டியில் யூனியன் கல்லூரியினர் 9 கோல்களால் வெற்றியீட்டினர்.

மேற்படி கல்லூரிகளின் 2-ம் பிரிவினருக்கு இடையே நடைபெற்ற மற்றுமோர் வலைப்பந்தாட்டப் போட்டியில் சாவகச்சேரி டிறிபெக் கல்லூரியினர் 4 கோல்களால் யூனியன் கல்லூரியினரை தோற்கடித்தனர்

## கலை அரங்கம்

# நடனக்கல்லூரி அவசியமானது

## நடன அரங்கேற்றத்தில் மேயர் வற்புறுத்து

யாழ்ப்பாணம், ஞாயிறு

வட இலங்கைச் சங்கீத சபையின் ஆதரவில் செல்வி லீலாம்பிகை கந்தையாவின் நடன அரங்கேற்றம் சனிக்கிழமை இரவு யாழ்ப்பாண நகர மண்டபத்தில் நடைபெற்றது. மேயர் திரு. டி. எஸ். துரைராசாவும், அவரது பாரியாரும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு நிகழ்ச்சிக்குத் தலைமைவகித்தார்கள்.

திருமதி துரைராசா செல்வி லீலாம்பிகைக்கு மலர் மாலை சூட்டிப் பாராட்டினர். வட பகுதிக் கல்வி அதிகாரி திரு. எஸ். யூ. சோமசேகரம் பேசும் போது, இந்தியாவுக்கும் இலங்கைக்குமிடையேயுள்ள கலாச்சாரத் தொடர்புகளைப் பலப்படுத்த லீலாம்பிகை போன்றோரின் முயற்சி பயனளிக்குமென எதிர்பார்ப்பதாகவும், நாடகம் கூத்து, இசை ஆகியன மக்கள் மனதை ஈர்க்கும் தகைமை வாய்ந்த கலைகள் என்றும் இவற்றை மக்கள் போற்றி வளர்க்கவேண்டுமென்றும் சொன்னார்.

மேயர் திரு. துரைராசா பேசும்போது, யாழ்ப்பாணத்தில் நடனக் கல்லூரி ஒன்று அமைக்கப்படுவதன் அவசியத்தை வற்புறுத்தியதோடு, நடன அரங்கேற்றத்துக்குப் பொறுப்பாக இருந்தவர்களையும் பாராட்டினர்.

கலையரசு கே. சொர்ணலிங்கம் நன்றி தெரிவித்துப் பேசினார்.



யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில் நடைபெற்ற செல்வி லீலாம்பிகை கந்தையாவின்நடன அரங்கேற்றத்தில் ஒரு தோற்றம்

## பம்பாயில் பத்மினி

### ராஜ்கபூர் விருந்துபசாரம்

நடிகை பத்மினிக்கும் அவரது கணவர் டாக்டர் ராமச்சந்திரனுக்கும் பிரபல வட இந்திய நடிகர் ராஜ்கபூர் தமது வீட்டில் விருந்துபசாரமளித்தார்.

'ஜிஷ்தேஷ்மே கங்கா' என்ற படத்தில் ராஜ்கபூர் - பத்மினி ஜோடியாக நடித்துள்ளனர். 'ஆஷிக்' என்ற படத்திலும் பத்மினியும் ராஜ்கபூரும் ஜோடியாக நடிக்கிறார்கள். பத்மினியின் திருமணத்திற்கு முன்பே ஒப்பந்தம் செய்யப்பட்ட இப்படம் முடிவடையும் தறுவாயிலிருக்கிறது. இப்படத்தில் நடிப்பதற்காக பம்பாய்க்கு வந்த பத்மினியுடன் அவரது தாயார் சரஸ்வதி அம்மாளும், கணவர் ராமச்சந்திரனும் வந்திருந்தனர்.

திருமணத்துக்குப்பின் பத்மினி முதல் தடவையாக இப்பொழுதுதான் பம்பாய்க்கு வந்ததால் ராஜ்கபூர் அவருக்கு விருந்தளித்தார்.

ராஜ்கபூரின் மனைவி, தந்தை, தாயார் ஆகியோர்களும் பம்பாய் படவுலக பிரமுகர்களும் இவ்விருந்தில் கலந்துகொண்டனர்.

## 'அதோ சரோஜாதேவி! இதோ ஜெமினி!'

### கட்டுச் சோற்றுடன் ரசிகர்கூட்டம்



மதுரையை அடுத்த வைகை அணைக்கட்டில் முத்தா பிலிம்சாரின் "பனித்திரை" படப்பிடிப்பு நடந்தது. நடிகை சரோஜாதேவியைப் பார்க்க 10 ஆயிரம் ரசிகர்கள் சென்றார்கள். கட்டுச் சோற்றுடன் கூடச் சென்று பார்த்தார்களாம். வைகை அணைக்கட்டில் சினிமாப்படப்பிடிப்பு நடந்தது இதுதான் முதல் தடவை! இந்த படப்பிடிப்பில் சரோஜா தேவி, ஜெமினி கணேசன், தங்கவேலு, எம். சரோஜா ஆகியோர் நடித்தார்கள்.

ஒரு வாரம் படப்பிடிப்பு நடந்தது. பக்கத்து ஊர்களிலிருந்து நடிகர்களைப் பார்க்க வந்த ஆயிரக்கணக்கான மக்கள் கட்டுச் சோறு கொண்டு வந்து அணைக்கட்டில் உட்கார்ந்து சாப்பிட்டுவிட்டுப் படப் பிடிப்பைப் பார்த்தார்கள்! "அதோ சரோஜாதேவி! இதோ ஜெமினி! டணால் தங்கவேலு!" என்று சொல்லி பார்த்துப் பார்த்து ரசித்தார்கள்.

தயாரிப்பாளர் வி. சீனிவாசகன் டைரக்ட் செய்தார்.

---

## விஜயா பிலிம்சாரின் புது மலையாளப்படம்

'புனர் ஜென்மம்' படத்தைத் தயாரித்த விஜயா பிலிம்சார் அடுத்து ஒரு மலையாளப் படத்தை தயாரிக்கிறார்கள். 4 மாதத்திற்குள் இந்தப் படம் தயார் ஆகும் இதில் பிரேம் நசீர், சத்தியம், குமாரி ஆகியோர் நடிக்கிறார்கள்.

## 'தேன்நிலவு'

கோடைக் கானலில் 'தேன் நிலவு' படப்பிடிப்பை முடித்துவிட்டு வந்ததும் வராததுமாக வாஹினி ஸ்டூடியோவில் படப்பிடிப்பை ஆரம்பித்தார் டைரக்டர் ஸ்ரீதர்.

இதற்காக அசல் பனிமலை போல் காட்சி அளிக்கும் செட்டை அமைத்து இருந்தார்! ஜெமினி கணேசன், வைஜந்திமாலா, வசந்தி ஆகியோர் நடித்த காட்சிகள் படமாக்கப்பட்டன.

---

## புது வீட்டில் படப்பிடிப்பு

எம். ஆர். ராதா ஒரு புது வீடு வாங்கினர் அதை அவரும் தங்கவேலுவும் போய்ப் பார்த்தார்கள்!

அவர்கள் பேசிக்கொண்டு இருக்கும் போதே 'திடீர்' என்று ஒரு சிறிய 'பார்சல்' வந்து தங்கவேலுவின் மீது 'பொத்'தென்று விழுந்தது ஆ......! காலை சாப்பாட்டுக்கு பூரிக்கிழங்கு வந்து இருக்கிறது என்றார் தங்கவேலு!

அடுத்த விநாடி, ஒரு கூஜா 'டமார்' என்று வந்து கட்டிலில் விழுந்தது! என்னடா இது கூரையிலிருந்து ஒவ்வொன்றாக விழுகிறதே என்று திகைத்தார் ராதா கூஜாவை எடுத்து முகர்ந்து பார்த்தார் தங்கவேலு. "குருவே, அசல் காப்பி" என்றார்!

இந்தக் காட்சி பத்மா பிலிம்சாரின் 'வளர் பிறை' படத்துக்காக நெப்டியூன் ஸ்டுடியோவில் படம் ஆக்கப்பட்டது.

## லட்சுமியின் பெண்மனம் படமாகிறது

லட்சுமி, எழுதிய 'பெண்மனம்' என்ற கதையை பிரசாத் இப்பொழுது தமிழில் படமாகத் தயாரித்து வருகிறார். இப்படம் இந்தியிலும் தயாரிக்கப்பட்டு வருகிறது.

'தாயில்லாப்பிள்ளை' என்ற வெற்றிப் படத்தை தயாரித்து வெளியிட்ட டைரக்டர் பிரசாத் 'பெண்மனத்தை' 'பாரிய பர்த்தலு' என்ற பெயரில் தெலுங்கில் தயாரித்து வெளியிட்டிருந்தார். இது நூறு நாட்களுக்கு மேல் ஓடி வெற்றியீட்டியது.

## தமிழ்ப்படம் - பெயர் "லவகுசா"

"லவகுசா" என்ற பெயரில் ஒரு தமிழ் படம் வெளிவருகிறது. இது, மலையாளத்தில் இருந்து தமிழ் ஆக்கபட்ட படம்.

இதில் இராமனாக பிரேம் நசீரும், சீதையாக குசலகுமாரியும் நடித்திருக்கிறார்கள்.

---

## சிறந்த நடிகர் நடிகைகளுக்கு மைலாப்பூரில் விருந்து

சென்னை, செப். 15

சென்ற ஆண்டு (1960) சிறந்த நடிகர் நடிகைகளாகப் பரிசு பெற்றவர்களுக்கு சினிமா ரசிகர் சங்கம் சென்னை மைலாப்பூரில் ஒரு விருந்து கொடுத்தது.

மனுலால் எல்லோரையும் வரவேற்றார். சங்கத் தலைவர் அருணாசலம், உபதலைவர் அனந்தநாயகி, நடிகர்கள் தங்கவேலு, இரங்கராவ் ஆகியோர் பேசினார்கள்! எம். கிரி நன்றி கூறினார்!

வெற்றிகரமான 3-வது வாரம்!
கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) விஜிதா (மஸ்கேலியா)
நவா (கொம்பனித்தெரு) வெலிங்டன் (யாழ்ப்பாணம்) விஜயா (மட்டக்களப்பு)
ஸ்ரீ கிருஷ்ணா (திருகோணமலை) மோடர்ன் (பதுளை)
லக்ஷ்மி (இரத்தினபுரி) தீவொளி (நுவரேலியா)

சிவாஜி கணேசன்
ஜெமினி கணேசன்
எம். ஆர். ராதா
சாவித்திரி
நடித்த
பாவ மன்னிப்பு
மனோஹரா (யாழ்ப்பாணம்) தினசரி மாலை 6-30 க்கும் இரவு 9-30 க்கும் சனி, ஞாயிறு பிற்பகல் 2-30
சிவாஜி கணேசன், பத்மினி
நடித்த
மரகதம்

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேலை வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1961-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 18-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.